250

Registered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 28—No. 2

250
2-55

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கட னடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே'

மலர் 28 | ஜய மாசி 1955 பிப்ரவரி | இதழ்

உள்ளுறை பக்கம்


| | |
|---|---|
| ஆவடியும் மூவடியும் ... | |
| தீர்மானங்கள் ... | 54 |
| சமாஜ உத்தியோகஸ்தர்கள் ... | 55 |
| மாயை ... | 57 |
| இயற்பகை முனிவர் ... | 60 |
| சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை ... | 65 |
| சமாஜ 49-ம் ஆண்டு அறிக்கை ... | 81 |
| சைவர் மாநாட்டுத் தலைமையுரை ... | 86 |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - APR 1955
MADRAS

பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.
...சிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

...த்தாந்த மகா சமாஜம்
...ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

R673 ... M28
... 28.2.
186988

Regd. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 28 | ஜய மாசி 1955 பிப்ரவரி | இதழ் 2

OF THE REGISTRAR OF BOOKS 1955

## ஆவடியும் மூவடியும்

[பத்திராசிரியர்]

ஆவடி காங்கிரசுக்குப் போகாத மனிதன் இல்லையென்றே சொல்லலாம். வேடிக்கை பார்க்கச் சென்றவர்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மர். காங்கிரசில் உண்மையான ஆர்வத்தோடு ஈடுபட்டுச் சென்றவர்கள் ஏனையோர். இந்தியாவிலுள்ள பற்பல மந்திரிகளும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். பல லக்ஷக்கணக்கான மக்கள், ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமியருமாக, வெயில் தாகம், கல் நிறைந்த தரையில் மணிக்கணக்கில் உட்காருகை, பல பேச்சாளர்கள் ஹிந்தியிலேயே பேசியதால் ஏற்பட்ட சந்தடி முதலிய எவற்றையும் பொருட்படுத்தாமல், தேருக்கும் திருவிழாவிற்கும் செல்வதுபோலவே சென்று அனுபவித்தார்கள். சென்னைக்கு அண்மையில் நடந்த இந்தக் காங்கிரஸ் விழாவைப்பற்றி ஏதேனும் எழுத வேண்டும் என்று பல அங்கத்தினர் விரும்புகின்றனர். சமயத் துறையில் உழைக்கும் நமது பத்திரிகையில் அரசியல் துறையிலுள்ள பொருள்கள்பற்றி எழுதுவது வழக்கம் அல்லவாயினும், அரசியல தொண்டர்கள், சமயத்துறையிற் படியும் சில பல தீர்மானங்களை ஏற்றுக்கொண்டமையால், நமது பத்திரிகையில் சில குறிப்புக்களைச் சுருங்கச் சொல்வதும் பொருத்தமேயாகும். ஆவடி காங்கிரசுக்குச் சென்ற இரு நண்பர்கள் தம்முட் பேசுவது போன்ற நடையில் இக்குறிப்புக்கள் அமைந்துள்ளன.

# திருமுறைகள் வாங்கிப் பரிசுகள் பெறுக

## ஆயிரம் ரூபா பரிசுத்திட்டம்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அடங்கிய முதல் ஒன்பது திருமுறைகளையும் பெரியபுராணத்தையும் வாங்குவோருக்கு ஒரு பரிசுத்திட்டத்தை நமது சமாஜம் ஏற்பாடு செய்துள்ளது. முதல் ஒன்பது திருமுறைகளின் விலை ரூபா எட்டு, பெரியபுராணம் விலை ரூபா மூன்று. இவற்றை ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் பெறுதற்குத் தபாற்செலவு ரூ. இரண்டரை. ஆ. ரூ. 13–8–0 முன்பணமாக அனுப்புவோர் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய புத்தகங்களும், எண் குறித்துள்ள ஒரு டிக்கெட்டும் அனுப்பப்படும். ஆயிரம் டிக்கெட்டுகள் இவ்வாறு செலவானவுடன், "சித்தாந்தம்" பத்திரிகையில் குறிக்கப்படும் ஒரு பொது இடத்தில் ஒரு விடுமுறை நாளில் டிக்கெட்டு எண்கள் குலுக்கப்பட்டு, அவற்றுள் முதலாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. அறுநூறு முதற் பரிசாகவும், இரண்டாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. இருநூற்றைம்பது இரண்டாம் பரிசாகவும், மூன்றாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. நூற்றைம்பது மூன்றாம் பரிசாகவும் அளிக்கப் பெறும். இப்பரிசுகள் பெறுதற்குச் சமாஜ அங்கத்தினரும், வேறு பொது மக்கள் எல்லோரும் தகுதியுடையவராவர். வி. பி. மூலமோ, ரயில்வே பார்சல் மூலமோ புத்தகங்கள் அனுப்பப்படமாட்டா. மேற்கூறிய புத்தகங்களோடு, சமாஜ இதர வெளியீடுகளையும், நாலாயிர திவ்யப்ரபந்தம் திருப்பாவை வியாக்யானம் முதலியவைகளையும் வாங்குவோருக்கும் இப்பரிசுத் திட்டத்தில் இடமுண்டு. எவ்வளவு சீக்கிரமாக ஆயிரம் டிக்கட்டுகள் விற்றுமுடிகின்றனவோ, அவ்வளவு சீக்கிரம் பரிசுகள் தரப்படும். ஆகையால் அன்பர்கள் விரைந்து வாங்குக. இங்ஙனம்: ச. சிவகுமாரன், காரியதரிசி, சைவ சித்தாந்த மகாசமாஜம்; ம. பாலசுப்பிரமணியன், பத்திராசிரியன், "சித்தாந்தம்" 10—2—1955,

---

## பெரியபுராணம் மூலம்

சமாஜ மூன்றாம் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும்பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0.

நெல்லையப்பன் :—அண்ணே ! நீங்கள் வந்த ரயிலில் கூட்டம் எப்படி ? எனக்கு நிற்கக்கூட இடம் கிடைக்க வில்லை. திருநெல்வேலியில் நேற்று மாலை 3 மணிக்கு ரயிலில் ஏறினின்றவன், இன்று காலை எழும்பூர் வரும்வரையில் உட்காரவேயில்லை. உனது பிரயாணமும் அப்படித்தானே ?

மதுரைமுத்து :—அல்ல அல்ல ! மதுரையிலிருந்தே புறப்பட்ட ஸ்பெஷல் ஒன்றில், வண்டி புறப்படுவதற்கு 2 மணி நேரம் முன்னதாகவே, ஒரு பெட்டியில் மேல்பலகையில் ஏறிப் படுத்துக்கொண்டேன். இன்று காலை எழும்பூர் வரும்வரையில் படுத்துக்கொண்டே வந்தேன்.

நெ :—வழக்கம்போல் நீதான் அத்ருஷ்டசாலி. இந்த அத்ருஷ்டம் காங்கிரஸ் கொட்டகையிலும் இருக்கவேண்டும். நேற்று பஸ் பிடிப்பதற்கு ஒரு மணி நேரம் க்யூவில் நின்றார்களாம், ஆவடியில் டிக்கெட் வாங்குவதற்கு ஆறு வரிசைகளில், வரிசைக்கு ஆயிரம் பேர் வீதம் க்யூவில் நின்றார்களாம், குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லையாம் என்றெல்லாம் இன்று காலை செய்தித்தாள்களிற் பார்த்தோமே !

ம :—இதற்கெல்லாம் பயப்பட்டால் நாம் ஆவடிக்கே வந்தது தவறு.

நெ :—எல்லாவற்றிற்கும் முன் எச்சரிக்கையாக ஒரு கூஜா நிறைய தண்ணீர் எடுத்துக்கொண்டு 2 மணிக்கே புறப்படலாம்.

ம :—சீசீ ! 12 மணிக்கே புறப்படுவதுதான் நல்லது. (இருவரும் 12 மணிக்கே புறப்பட்டு, 2 மணிக்குள்ளாக ஆவடியைச் சேர்ந்தார்கள்.)

நெ :—அண்ணே ! பார்த்தாயா கோபுரத்தை ! இதை ஜோடிக்க ஒரு டன் ஆணி செலவாயிற்றாமே ! அடாடா எவ்வளவு உயரமான துவார பாலர்கள் ! ஒருபுறம் மசூதி, மற்றொருபுறம் மாதாகோயில், அறுபது வருஷத்திய தலைவர்கள், வட்டமான பந்தர் ! லக்ஷக்கணக்கில் மக்கள் உட்கார்ந்து கேட்பதற்கு, மிகப் பெரிய திறந்தவெளிப் பேரரங்கம், பல ஒலிபெருக்கிகள், பற்பல வாயில்கள், அமைதியைப் பாதுகாக்க [illegible]க்கணக்கான ஆண் பெண் தொண்டர் [illegible]யினர், அவர்[illegible] உதவியாகப் பல போலீஸ்

186908



படையினர், தாகம் தணிப்பதற்குதவும் தண்ணீர்ப் படையினர், இவைகளை எல்லாம் பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டும் அண்ணே ! ஒரு வடநாட்டுப் பிரமுகர் ஆவடி ஆவடியல்ல, தேவலோகமே என்று புகழ்ந்ததைக் காலை செய்தித்தாள்களில் படித்தோமே ! முழுவதும் உண்மை !!

ம :—அடேயப்பா ! ஏது ஏது ! உனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே !

நெ :—இல்லை அண்ணே ! இவ்வளவு பெரிய திட்டத்தை நாம் எங்கே பார்த்திருக்கிறோம் ?

ம :—இவ்வளவு அதிக பணம் எங்கே வசூலாயிற்று. செலவெல்லாம் போக, காங்கிரசுக்கு எத்தனையோ லக்ஷம் லாபம் வருமாமே !

நெ :—எவ்வளவு லாபம் வந்தாலும், நமக்கு அதில் ஒரு கொள்ளிக்காசு வராது அண்ணே !

ம :—அப்பப்பா ! வந்தாயா நிதானத்துக்கு. உட்காருவதற்கு முடியாதபடி பரலும் கல்லும் முளைவிட்டாற்போல குத்துகிறதே. ஆளுக்கொரு கம்பளாசனம் கொண்டு வராமற் போனோமே ! இவ்வளவு செலவு செய்தவர்கள் ஒரு நூறு லாரிகளில் ஆற்றுமணல் போட்டிருக்கலாமே !

நெ :—ஏழைமக்களின் கஷ்டம் பணக்காரர்கட்கு எப்படித் தெரியும் அண்ணே !

ம :—தம்பி, உன் வாயில் சர்க்கரைதான் அள்ளிப் போடவேண்டும்.

இருவரும் இரண்டுநாட்கள் ஆவடி காங்கிரசுக்குச் சென்று, வேறு சென்னையிற் பல இடங்களையும், தேனாம்பேட்டைக் கண்காட்சியையும் பார்த்துவிட்டு ஒரு ஸ்பெஷல் வண்டியில் மதுரைவரைக்கும் உட்காருவதற்கு இடம்பிடித்துக்கொண்டார்கள். ரயில் பிரயாணத்தில் ஆவடி தீர்மானங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள்.

நெ :— ஆவடியில் நிறைவேறிய தீர்மானங்களெல்லாம், அண்ணே ! எவ்வளவு அற்புதமான போற்றற்குரிய, நமது பாரததேசத்தையே வானுலகத்திற்கு உயர்த்தக்கூடியவை !!

ம :—அப்படி என்ன தம்பி அவற்றில் சிறப்புள்ளது? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?

நே :—முதல் தீர்மானம் ஒன்றே கோடி பெறுமே! Socialist Pattern of Society (பொதுநலத் திட்டத்தில் சமூக அமைப்பு) என்று நாம் இப்போதுதானே தீர்மானித்தோம்?

ம :—உனக்குத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் தெரியாது. இந்த அமைப்பு நமது தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகளாக நிலவிவந்தது. எழுநூறு ஆண்டுகட்கு முன்பிருந்த சேக்கிழார், தமது பெரிய புராணத்துள் பல நாயன்மார்கள் வரலாற்றில் இதை விவரிக்கிறார். அவர் கூறும் Socialism துப்பாக்கி முனையில் வற்புறுத்தப்படும் திட்டமல்ல, ஈர அன்பினர் இதய முனையில் ஒளிவிட்டெழும் இன்பத் திட்டம்.

நே :—ஆமாம் அண்ணே! எனக்கு இப்போதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் 1928 ௵ எங்கள் ஊரில் ஒரு பெரிய சைவர் மகாநாட்டில் தலைமை வகித்தார். அப்போது ஒரு சைவ இளைஞரும், சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசியுமாகிய (ம. பா.) ஒருவர் "Periyapuranam, a Socialist Magna Carta" (பெரிய புராணம் ஒரு பொதுநிலைப் பெரும் பட்டயம்) என்று சுமார் 2 மணி நேரம், பல அழகான காரணங்கள் காட்டி விளக்கினார்.

ம :—இதையெல்லாம் கேட்டுப் பழகிய நீதானா இப்போது பிரமாதமாகப் புகழ்கின்றாய்?

நே :—இல்லை அண்ணே! காங்கிரசுகூட சைவத்துள் நுழைந்துவிட்டதே என்று பெருமிதத்தோடு பேசுவது தவறா? Secular Stateல் சமயக் குறிக்கோள் நுழைந்துவிட்டது. இந்த வியப்பை யாரிடம் சொல்வது? இது காங்கிரசின் சிறந்த பேறல்லவா?

ம :—சரி, சரி, மற்றைய தீர்மானங்களைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

நே :—அண்ணே! நானே சொல்லிக்கொண்டுபோனால் பலனில்லை. உனது மனதுக்குப் பிடித்த தீர்மானம் ஒன்றைச் சொல், கேட்கலாம்.



ம :—சொல்லுகிறேன் கேள், தம்பி! நீ சொன்ன பொதுநல திட்டக் குறிக்கோளை நிறைவேற்றும் முறையில், நாம் ஆதிக்க அரசியல் வாழ்க்கையை (Power Politics) அறவே விடுத்து, அஹிம்சைவழியில் பொருளாதாரத் துறையில் முன்னேறி, பட்டினி பிணி முதலியன இல்லாமல், எல்லோருக்கும் வேலை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நிரவிச் சமப்படுத்துதல், எவருமே உண்ண உணவும் உடுக்க உடையுமின்றித் தவிக்கும் நிலையை வேரோடு பிடுங்கி எறிதல் வேண்டும் என்ற பொருளாதார உரிமைத் தீர்மானம் (Economic Freedom) எனது மனதைக் கவர்ந்தது.

நே :—அண்ணே! நீ சொல்லுகிற வழியில் அறுபத்து மூன்று நாயன்மார்களுட் பலர் வாழ்ந்தனர். "யார் எதைக் கேட்டாலும் என்னிடம் இருப்பதானால் தருவேன்" என்று ஈகைக்கொடி நாட்டிய இயற்பகை நாயனார் சரிதம் ஒன்றே போதுமே. இந்தத் தீர்மானத்திலும் காங்கிரசு சைவத்துள் நுழைகின்றது.

ம :—தம்பி, நீ வேறொரு தீர்மானத்தைச் சொல்.

நே :—தேசபக்தி எனும் போர்வையில், பல சுயநல அரக்கர்கள் வாழ்வதை ஒழிக்கத் தூய்மைத் தீர்மானம் என்னைக் கவர்ந்தது. நமது நாட்டில் காங்கிரசின் பெயரால் நடந்த தீமைகட்கு அளவேயில்லை. பொதுத் தேர்தல்கள் பலவற்றில் காங்கிரஸ் பலத்த தோல்வியுற்றுத் திண்டாடியதை நாம் நன்கறிவோம். காங்கிரஸ் தொண்டர்கள் தூய்மை நெறியிலிருந்து எள்ளளவும் பிறழக்கூடாது; இவர்களைக் கண்காணிக்க ஒரு நிலைத்த கண்காணிப்புக் கழகம் நிரந்தரமாகப் பணிபுரிதல் வேண்டும் என்றெல்லாம் ஆவடி தீர்மானித்துள்ளது. தொண்டர்கள் தூய்மை பிறழாது பணிபுரிதலை உலகத்தினர் அறியவேண்டுமென்றே, பலர் வரலாறுகளில் சிக்கலான நிலைகளை ஏற்படுத்தி அவைகளில் தொண்டர்கள் வெற்றிபெறுவதைச் சிவபெருமானே பல அடியார்களின் பெருமையாக நிலைநாட்டுகின்றார். வேறு பல சமயத்தவர் சரிதங்களிலும் இவ்வாறே நடந்துள்ளது.

ம :—தம்பி, எனக்குத் தூக்கம் வருகிறது. ஆவடியில் மூவடிபற்றி ஆராய்ச்சியை இத்தோடு நிறுத்திக்கொள்

வோம். நாளை என்னோடு மதுரையில் தங்கி வைகையாற்றங்கரையில் மற்றத் தீர்மானங்கள் பற்றிய ஆராய்ச்சியை நடத்துவோம்.

நே :—சரி, அப்படியே செய்கிறேன். எஞ்சியவைகளை நாளை மறுதினம், என்னோடு திருநெல்வேலிக்குப் போய், தண்பொருநைக்கரையில் இருவருமாக ஆராய்ந்து முடிப்போம். நமது ஆராய்ச்சியால் பெரியபுராணத்தின் பெருமைதான் விளங்குகின்றது அண்ணே !

ம :—ஆராய்ச்சி செய்த அளவில், பெரிய புராணம் ஒப்புயர்வற்ற நூல் என்பதில் என்ன தடையிருக்கக்கூடும்?

நே :—நாம் ஆவடிக்குச் சென்று வந்ததன் பயன், நாடோறும் 20 பெரியபுராணப் பாடல்களையாவது படித்தலேயாம்.

ம :—இது எனக்கு முற்றிலும் உடன்பாடே. (இருவரும் தூங்கத் தொடங்கினர். கனவில் "ஆவடியில் மூவடி" என்று பலமுறை தழுதழுத்த குரலிற் சொல்லினர்).

---

## விருதுநகரில் 26—12—1954ல் நிறைவேறிய தீர்மானங்கள்

(1) அண்மையில் சென்னை அரசியலார் நிறைவேற்றிய நாடகச் சட்டத்தை இம்மாநாடு மனமாரப் பாராட்டி வரவேற்கின்றது. (2) நேரான அல்லது மறைமுகமான மத நிந்தனை கடவுள் நிந்தனையுள்ள சினிமாப் படங்களையும் தடுக்கும் சட்டம் மிகவும் இன்றியமையாதது என்று இம்மாநாடு கருதுகின்றது. இதற்கான சட்டத்தைக் கொண்டு வருமாறு இச்சமாஜம் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது. (3) வசதியான திருக்கோயில்களில் தகுந்த சம்பளத்திற்குத் திருமுறை ஓதுவார்களை நியமிக்க வேண்டுமென்று அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தையும் கோயில் நிர்வாகிகளையும் இம்மாநாடு கேட்டுககொள்கிறது. (4) திருக்கோயில் வருமானங்களில் மிகுந்தவற்றைக் கொண்டு சமயப் பிரசாரம் முதலிய சமய வளர்ச்சிக்கான செயல்களையே செய்தல் வேண்டுமென்றும், அப்படியும் பணம் மிகுதியாயிருப்பின், அதைக் கொண்டு பழுதுபட்ட திருக்கோயில்களைச் செப்பனிட வேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது. (5) மக்களின் நல்வாழ்விற்கும் தேசிய முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததாயிருக்கும் சமய போதனையைக் கல்விக்கூடங்களில், மாணவர்களுக்குக் கட்டாயம் அளித்தல் வேண்டுமென்று அரசியலாரை இம்மாநாடு ஆர்வமுடன் வேண்டிக்கொள்கிறது. (6) இலங்கை திருக்கேதீச்சரத் திருப்பணி முயற்சியை இம்மாநாடு போற்றி ஆதரிக்கின்றது. (7) திருக்கோயில் சடங்குகள் யாவும் திருமுறைகள் கொண்டே நடைபெற வேண்டும் என்பது தமிழ்மக்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பது சமாஜத்தின் கருத்து. (8) கார்த்திகை தீபத்தன்றும் மகாஸ்கந்த சஷ்டிக்கும் விடுமுறை அளிக்குமாறு சென்னை அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. (9) திருக்கோயில்களில் திருமுறைகள் ஓதிய பிறகே ஆசீர்வாதம் செய்யவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகின்றது.



---

## சைவசித்தாந்த சமாஜத்தின் 1955–ம் வருஷத்திய உத்தியோகஸ்தர்கள்

(ஒவ்வொருவர் பெயர் முன் திரு என்றும், பின் அவர்கள் என்றும் சேர்த்து வாசிக்கவும்.)

தலைவர் : ச. சச்சிதானந்தம் பிள்ளை. உதவித்தலைவர்கள் : அ. சோமசுந்தரம் செட்டியார், க. வஜ்ரவேல் முதலியார். பொதுக்காரியதரிசி : ச. சிவகுமாரன். பொருட்காப்பாளர் : ம. சி. நித்தியானந்தம். உதவிக்காரியதரிசி : சு. இளவழகன். பத்திராசிரியர் : ம. பாலசுப்பிரமணிய முதலியார். உதவிப் பத்திராசிரியர் : புலவர் முருகவேள். செயற்குழு உறுப்பினர் : வே. தியாகராஜ முதலியார், ச. நடேச முதலியார், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், நல். முருகேச முதலியார், மு. நாராயணசாமி முதலியார், ம. சி. சம்பந்த முதலியார், வா. கிருஷ்ணமூர்த்தி, நே. த. கிருஷ்ணசாமி முதலியார், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், பூ. சமரபுரிமுதலியார், ஆடலரசு, ச. நமச்சிவாயமுதலியார். மாதக்கணிதபரிசோதகர் : ச. நடராச முதலியார். ஆண்டுக்கணித பரிசோதகர் : ச. திருநாவுக்கரசு பிள்ளை.

## பத்திராசியர் கழகம், பணியாளர் கழகம்

தலைவர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார். செயலாளர்: ம. பாலசுப்பிரமணிய முதலியார். உறுப்பினர்: கீ. இராமலிங்க முதலியார், அ. கு. காமாக்ஷியம்மையார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, வ. ஆ. தேவசேனாபதி பிள்ளை, வ. நாகலிங்கம், க. வஜ்ரவேல் முதலியார், வெள்ளை வாரணர், எஸ். கோலப்பன். ஆராய்ச்சிக் கழகம்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், க. வஜ்ரவேல் முதலியார், வ. நாகலிங்கம்.

## வெளியூர் ஆலோசனை சபையினர்

கோயம்புத்தூர்: வி. சி. சுப்பையா கவுண்டர், சி. எஸ் இரத்தினசபாபதி முதலியார், லக்ஷ்மி நாயுடு. சேலம்: பொம்மண்ண செட்டியார், ஆர். வி. கோபால், ஆர். கே. கிருஷ்ணசாமி. வட ஆர்க்காடு: புரிசை முருகேச முதலியார், டபில்யூ. கே. ஜானகிராம முதலியார், வரதராஜுலு செட்டியார். தென் ஆர்க்காடு: இரத்தினசாமி செட்டியார், சின்னையா முதலியார், முத்துகிருஷ்ண பிள்ளை, அண்ணாமலை உடையார், மு. சின்னசாமி ரெட்டியார். சிந்தூர்: அரங்கநாத முதலியார். செங்கற்பட்டு: வா. தி. மாசிலாமணி முதலியார். தஞ்சாவூர்: மஞ்சட்கொல்லை ஆர். எம். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார், மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், குடந்தை கதிரேசன் செட்டியார். திரிசிராப்பள்ளி: வரதராஜுலு செட்டியார், வரதராஜ பிள்ளை, பஞ்சநதம் பிள்ளை. தென் திருவிதாங்கூர்: சி. வள்ளிநாயகம் பிள்ளை, பி. நாகமணி பிள்ளை, சைவப் புலவர் வித்வான் பகவதிப்பெருமாள் பிள்ளை, எஸ். கோலப்பன். மதுரை: கருமுத்து. தியாகராச செட்டியார், ஸர். பி. டி. ராஜன், வி. வி. சி. ஆர். முருகேச முதலியார். இராமநாதபுரம்: முத்த. வே. சொக்கலிங்கம் செட்டியார், பி.எல். டி. எல். தேனப்ப செட்டியார், சேவு. மெய்யப்ப செட்டியார், சா. கணேசன், சொ. நாராயணன் செட்டியார், பழ. நாராயணன் செட்டியார், பாலகவி இராமநாதன் செட்டியார், ராம. சொ. திருநாவுக்கரசு செட்டியார். திருநெல்வேலி: ஆறுமுகசாமி நாட்டார், மறை. திருநாவுக்கரசு. பெங்களூர்: ஆ. ர. அண்ணாமலை முதலியார். புதுச்சேரி: கிரந்தே பாலசுப்பிரமணிய செட்டியார், ஏ. எஸ். கந்தசாமி பிள்ளை, எஸ். சென்னியப்ப முதலியார். கொழும்பு: ஸர். கந்தையா வைத்யநாதன் எஸ். நடேசன், அருள். தியாகராசா. யாழ்ப்பாணம் எ. அருளம்பலம், முத்துத்தம்பி, அம்பிகைபாகன். மலேபா கா. இராமநாதன் செட்டியார், கோவிந்தசாமி பிள்ளை அ. மு. அ. பெரியசாமி பிள்ளை, பழனிவேல் பிள்ளை ஆர். வி. கந்தையா.



---

# 1. மாயை

[முத்து. சு. மாணிக்கவாசகன்]

சைவசித்தாந்தம் எல்லோர்க்கும் பொது. அதுபோல எளிதான சமயம் வேறு இல்லை. அதுவே இக்காலத்தினர் பலர்க்கு அறிவதற்கு அரிய சமயம் என்று தோன்றுகின்றது. அதற்குக் காரணங்கள் பல. எளிய முறையில் தெளியச் செய்தலே முதலில் அரிதாயிருக்கின்றது. நம் சமாஜம் செய்துவரும் தொண்டுகள் பலவற்றுள் நூல் வெளியீடும் ஒன்று. அவ்வெளியீடுகளுள் சித்தாந்த சாத்திரங்கள் எல்லாம் உலகோர்க்குக் குறைந்த விலையில் கிடைத்திருக்கின்றன. இருந்தும் எத்தனை மக்கள் சைவ சித்தாந்தத்தை உணர்ந்திருக்கின்றார்கள்?

இது முதலாக அதைத் தெளிய எழுதும் முயற்சியை உடையேன். இம்முயற்சி, சென்ற கார்த்திகைத் திருவிழாவில் திருவண்ணாமலையில் நம் சமாஜ "சித்தாந்த"ம் பத்திராசிரியரும் பேரறிஞரும் குன்றாத ஊக்கந்தரும் வழிபாட்டில் வழுவாதவருமாகிய உயர்திருவாளர் - ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பி.ஏ.,பி.எல். தோற்றியது. அதனால் அவர்கட்கு என் நன்றி உரியது.

சைவசித்தாந்தம் கடவுள், உயிர்கள் கடவுளை அடையாத நிலையில் உயிர்களைப்பற்றிய கட்டுக்கள் என்னும் பொருள்களை உணர்த்துவது.

அவற்றுள், கட்டுக்களைப் பாசம் என்பர். உயிர்களைப் பசு என்பர். கடவுளைப் பதி என்பர். எனவே, பதிபசுபாசம் என்னும் முப்பொருளும் பற்றியதே சைவசித்தாந்தம் ஆகும்.

பாசம் மூன்று. அவை ஆணவம், மாயை, கன்மம் என்பவை. அவற்றுள், மாயையையும் அதன் காரியங்களையும் முதலில் அறிந்துகொள்வதே தக்கது.

மாயை ஆவது தன் காரியங்களாகிய கலை முதலிய வழிகள் (அத்துவாக்கள்) எல்லாம் தோன்றவும் ஒடுங்கவும் முதற்காரணமாயும் இடமாயும் இருப்பது. இப்படி எழுதி விட்டால் இது விளங்குமோ? விளங்காது.

மாயை ஒரு காரணப்பொருள். அதிலிருந்து அத்துவாக்கள் தோன்றுகின்றன. மண்ணும் அம்மண்ணிலிருந்து தோன்றும் குடம் முதலிய பொருள்களும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. மண்வேறு குடம்வேறு ஆகா. மாயை வேறு அத்துவாக்கள் வேறு ஆகா. குடமானது மண்ணே ஆனாலும் குடத்திற்கு வேறாக மண் தனியாய் இருக்கக் காண்கின்றோம். குடத்திலும் மண் இருக்கின்றது. அதுபோல, அத்துவாக்கள் எல்லாம் மாயையே ஆனாலும் அவற்றிற்கு வேறாக மாயை தனியாய் உண்டு. அத்துவாக்களிலும் மாயை உண்டு.

குடம் உடைந்து தூளாகி மண்ணே ஆகும். அத்துவாக்களும் பருப்பொருளாயிருக்கும் நிலைமை மாறி நுண்பொருளாக மாறி மாயையில் ஒடுங்கி மாயையே ஆகிவிடும்.

உயிர்கள் இயக்கும் உடம்புகளை நோக்குவோம். உடம்பு கருவில் எவ்வாறு அமைந்தது? எவ்வளவாயிருந்தது? வெளியில் வந்தபோது இருந்த நிலை என்ன? பின் வரவர வளர்ந்த வியப்பு என்ன? நாற்பது வயது ஆனபின்பு தளர்ந்த தன்மை என்ன? உயிர் பிரிந்தபின் அதன் மாற்றம் என்ன? தீயில் இட்டு எரித்தால் அவ்வுடம்பிலிருந்தவை என்ன ஆகும்? மண்ணில் புதைத்தாலும் மற்று யாது செய்தாலும் அவ்வுடம்பின் கூறுபாடுகள் என்னவாறு மாற்றம் அடைகின்றன?

உடம்பு மாயையின் காரியம். மாயை முதற்காரணம். மண் முதற்காரணம். அம்மண்ணிலிருந்து உண்டான குடம் காரியம். அதுபோலத்தான் உடம்பும் காரியப்பொருள். குடம் உடைந்து மண்ணாகும். உடம்பு நுணுகி மாயை ஆகும். உடம்பிலிருந்த தத்துவங்கள் எல்லாம் அதில் உயிர் உள்ளவரைக்கும் உபகாரப்பட்டன. உயிர் உடம்பைவிட்டு



நீங்கியதும் அந்த உயிரொடு செல்லும் தத்துவங்கள் பல. உடம்பாயிருந்து நீங்கும் தத்துவங்கள் சில.

உடம்பாக இருந்த தத்துவங்கள் ஐந்து. அவை பிருதிவி (மண்), அப்பு (நீர்), தேயு (தீ), வாயு (காற்று, கால்+து, வீசுவது), ஆகாசம் (வான், வெளி).

நாம் காணும் மண் ஸ்தூலம், அதன் தத்துவம் சூக்ஷுமம். நம் கண்ணுக்குத் தெரியும் நீர் ஸ்தூலம். அதன் தத்துவம் சூக்ஷுமம். இப்படியே மற்றைய மூன்றும் ஸ்தூலம் சூக்ஷுமம் என்று பேதப்படும்.

மண் என்ற தத்துவம் வேறு. அது கண்ணுக்குத் தெரியாது. நம் கண்ணுக்குத் தெரியும் மண் கலப்புப் பொருள். அதில் மண் மட்டும் இல்லை. மற்றவையும் கலந்துள்ளன. மண்ணுக்குத் தாங்கும் தன்மை உண்டு. ஒருபிடி மண் எதைத் தாங்கும்? ஒரு குட்டைச் சுவர் எதைச் சுமக்கும்? நெட்டைச் சுவர் எதைப் பொறுக்கும்? இம்மூன்றிலும் வெவ்வேறு அளவான பாரத்தைத் தாங்குவது எது? அது அழியாது. அதுவே தத்துவம் (தத் - அது. துவம் - தன்மை. தத்துவம் - அதன் தன்மை. அத்தன்மை அழியாது. அத்தன்மையை உடைய பொருளும் அழியாப் பொருள்.)

நமக்கு மண்ணே தாங்குவதேபோலத் தோன்றும். தோன்றுவதும் மண் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றது. அம்மண்ணுக்கு உயிர்போல இருந்து தாங்கும் தத்துவத்தையும் மண் என்று வழங்குகின்றோம். பிருதிவி தத்துவம் வேறு. அதன் கலப்பு மிகுதியாயும் ஏனைய நான்கு பூதங்களின் கலப்பு ஒவ்வொரு பகுதியாயும் உள்ள மண் வேறு. மண்ணில் செம்பாதி பிருதிவி. மற்றைச் செம்பாதியில் நான்கு பாகமாக நான்கு பூதங்களும் (நீர், தீ, கால், வெளி) இருக்கின்றன. பூமியைத் தோண்டினால் நீரும் காணப்படும். நெருப்பும் சுடப் பெறலாம். காற்றும் வீசக் கிடைக்கலாம். வெளியும் இருக்க நிற்கலாம். உடம்பில் ஐம்பூதக் கலப்பும் உண்டு. உள்ளங்கையை வாயால் ஊதிப்பார்த்தால் அந்த ஐந்தும் புலப்படும்

1. 'மண்ணுக்கு உயிராகி வந்து உரத்துத் தான் தரிக்கும்.'
2. 'நீர்க்கு உயிராய் நின்றே நெகிழ்ந்து குளிரும்.'

3. ‘ வன்னிக்கு உயிராகி வந்தசுட்டு ஒன்றுவிக்கும்.’
4. ‘ வாயு அருட் குருவால் காண்பதன்றிச் சொல்லவாராதே துணிந்து.’
5. ‘ இரதாமாய் நின்றே இடங்கொடுக்கும் வானம் உண்மைக் குரவனால் காணலாம்.’

---

# இயற்பகை முனிவர்

[M. P. தியாகராஜன், பி.ஏ.]

“ இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன் ” என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரரால் போற்றப் பெற்றவரும், “ இயற்பகை முனிவர் ” என்று சிவனே பெயரிட்டு விளித்ததாக சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் போற்றப்பெற்றவருமான இச் சிவனடியாரின் வாழ்க்கை ஓர் பற்றற்ற பண்பு வாய்ந்தது. இன்றியமையா இல்லற வாழ்க்கையில் பற்றற்ற நிலையை எய்துவது இறைவனருளன்றி இயலாது. “ பற்றற்றான் தாளினையே பற்றுக பற்றுவிடற்கு ” என்று திருவள்ளுவர் உபதேசித்துள்ளார். சிவனடியார்களுக்கு இல்லையே யென்னாது வேண்டுவன வழங்கிவந்த தொண்டினின்றும் அவருடைய பற்றற்ற பண்பு விளங்கும்.

பூம்புகார் நகரில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் இயற்பகை அடிகள். உலக இயலைப் பகைத்தவர் எனக் காரணப் பெயராகவும் அவர் திருநாமம் அமையும். அளவில் செல்வத்து வளமையின் அமைந்தவர் என்றும், செக்கர் வெண்பிறைச் சடையவர் அடிமைத்திறத்தின் மிக்கவர் என்றும் சேக்கிழார் பெருமான் அவருடைய பண்பாட்டை விளக்குகிறார். மனையறம்புரி மகிழ்ச்சி நீறுசேர் திருமேனியர் ஏவின செய்வதே என நினைந்து அவ்வண்ணம் குன்றா ஒழுக்கத்தில் வாழ்ந்துவந்தார்.

அப்படி வாழ்ந்துவந்த நாளில் தூயநீறு பொன்மேனியில் விளங்கத் தூர்த்த வேடமும் தோன்ற வேதியராய் சிவபெருமான் இயற்பகையாரின் மனையுள் ஓர்நாள் புகுந்தார். வந்த அடிகளை அன்பொடு சென்றெதிர் வணங்கி



சிறப்பின் மிக்க பூசனைகள் முன்செய்து பின் அவர் வந்த காரணம் யாது பற்றியோ என இயற்பகை அடிகள் வினவினர். “ நும்பால் ஒன்று வேண்டி இன்று நான் இங்கு வந்தனன் ” என அவர் கூறவே “ யாதும் ஒன்றும் என் பக்கல் உண்டாகில் அன்னதெம்பிரான் அடியவர் உடைமை ” என்று உறுதிகூறி மீண்டும் அவர் வேண்டுவது யாதோ எனப் பணிந்து இயற்பகை வினவி நின்றனர் “ மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தது இங்கென ” அந்தணர் மொழிய, இயற்பகையார் தம்மிடத்துள்ளதையே வேண்டினர் என மகிழ்ந்து தம் மனைவிக்கும் அன்னவளை அவ்வடியார்க்கே அளித்துவிட்டதாகத் தெரிவித்தார்.

ஈண்டு அன்பர்கள் பலர் இவ்வரலாற்றில் வெறுப்புக் கொள்கின்றனர். ஏன் ? இறைவன் ஒருவன் மனைவியை விழைந்தனரே என்பதுதான். அன்னவளை எதற்காக வேண்டினர் என்ற குறிப்பு வரலாற்றிலில்லை. காதலித்து வேண்டியதாக நினைப்பதற்கு அவர் யௌவனமாக வந்ததாக ஒரு குறிப்புமில்லை. அரிச்சந்திரன் தன் மனைவியையும் மகனையும் இன்னொருவர்க்கு அடிமைப்படுத்தினான் என்று சொல்லுமிடத்துத் தன் மனைவியின் கற்பைத் பங்கப்படுத்தவா எண்ணினான். அப்படி நாம் எண்ணுவதுமில்லை. அதேவிதம் இயற்பகையாரும் தம் மனைவியை அந்தணர்க்கு அளித்துவிட்டதாகச்சொன்னபோது தன்மனைவியின் கற்பு பங்கப்படவேண்டும் என்ற கருத்தன்று. சிவனடியார்களை காமனைக் காய்ந்த சிவனென்றே நினைத்து வாழ்ந்துவந்த அவர் அவ்வாறு நினைத்திருக்கவே மாட்டார். நம் ஆப்த நண்பர் ஒருவர் வீட்டில் ஒரு சுபச்சடங்கு செய்வதற்குச் சுமங்கலி தேவையென்று வைத்துக்கொள்வோம். அவர் வீட்டில் யாரும் இல்லாமையால் நம்மிடம் வந்து “ உங்கள் சம்சாரத்தை அழைத்துப் போகலாமென்று வந்தேன் ” என்று காரணம் சொல்லாமலே முதலில் கேட்பாராயினும் அவர் ஆப்த நண்பர் ஆதலால் அவரை தவறாக நினைக்கமாட்டோம். வேண்டுமானால் எதற்கு என்று பின்னர் கேட்போம். உலக வழக்கில் இவ்வாறு நினைப்பதில்லை யென்றபோது அடியவர்கள் வரலாற்றிலா தவறான எண்ணங்களைப் புகுத்தி வெறுப்படைவது ? மேலும் இறைவன் வந்ததின் நோக்கம்

தம்மடியாராகிய இயற்பகை உண்மையில் இல்லையே யென்றது எதையும் பிறருக்குக் கொடுக்கும் இயல்பினில் உறுதி கொண்டிருக்கின்றனரா என்பதை உணர அன்றோ? அந்த நிலையில் இயற்பகை எதைக் கேட்டால் கொடுக்கத் தயங்குவாரோ அதைக் கேட்போம் என்று எண்ணிக் கேட்டதாக எண்ணுவது பிழையாகுமா? காம இச்சை கொண்டு கேட்டதாகத்தான் கொள்ளவேண்டுமா? ஒருவன் எதைக் கேட்டாலும் கொடுத்துவிடுகிறானும் என்று கேள்விப்பட்ட எவர்க்கும் அவன் தன் மனைவியையும் கொடுத்துவிடுவானா? தன் உயிரையும் கொடுத்துவிடுவானா? என்று ஒரு ஐயம் ஏற்படுவது இயல்பன்றோ? அந்த நோக்குடன் ஏன் இந்த வரலாற்றை நினைக்கலாகாது?

நிற்க இயற்பகையின் மனைவியின் மனப்பாங்கு அவ்வமையம் எப்படி இருந்ததென்று கவனிப்போம். அன்னவளும் தன் கணவன் உரைத்ததையே செய்வதன்றி வேறு உரிமை தனக்கென இல்லை யென்பதைத் தெரிவித்துக் கொண்டு அவ்வடியார் எதிர்நின்று வணங்கினார், "உரிமை வேறுளதோ எமக்கு" என்று நின்ற இருவரின் தன்மை ஈண்டு முக்கியமாகக் கவனிக்கற்பாலது. அதுவே உய்யக் கிடக்கும் ஆன்மாக்களின் பக்குவநிலை. தன் மனைவியைக் கொடுத்துவிட்ட அளவில் நில்லாது இயற்பகையார் வாளொடு பலகை ஏந்தித் தம் தானத்தைத் தடுக்கவந்த சுற்றத்தாரனைவரையும் வெட்டி வீழ்த்தி "அடிகள் நீர் அஞ்சாவண்ணம் பொருவருங்கானம் நீங்கவிடுவன்" என்று அவர் முன் சென்றார். அவ்வம்மையாரும் "இறைவனே அஞ்சவேண்டாம் இயற்பகை வெல்லும்" என்று மகிழ்ந்து கூறினார். ஈண்டு இருவரும் மனமுவந்து செய்த தானம் போற்றற்பாலது. தானம் என்பது இவ்வாறு தம்மையே ஆண்டவனுக்குக் கொடுப்பதாகும். செய்வது கடன் என்று செய்யாது தருமங்களையும் தானங்களையும் மனமுவந்து செய்தல்வேண்டும் என்பதையும் ஈண்டு உணர்தல் வேண்டும்.

தன்னுடைய சுதர்மத்தைச் செய்ய இடையூறாக நின்ற தன் இனத்தவர்களை இனத்தவர்கள் என்ற பற்றின்றி வெட்டி வீழ்த்தினார். நற்காரியங்களுக்கு இடையூறாக எவரினும் அதை எவ்வாற்றானும் விலக்கிச் செந்நெறியைக்



கடைப்பிடிப்பதே வைராக்கியமாகும். செந்நெறி இதுவெனத் தேர்ந்து ஒழுகுதல் விவேகமாகும். விவேகம், வைராக்கியம், பற்றற்ற தன்மை, சுகதுக்காதி சகித்தல் இவையாவும் ஞான சாதனங்களன்றோ? நாம் உவந்து செய்ய வேண்டும் என்று எடுத்துக்கொள்ளும் செந்நெறிக்கு இடையூறாக நம் அன்பர்களும் உறவினர்களும் இருப்பார்கள். அவர்கள்பால் கொண்ட பற்றினால் அவ்விடையூறுகளை விலக்க இயலாது வினையின் பயன் என வருந்துபவர்கள் பலர். மனைவியரே ஆனாலும் "சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளே யாமாகில் கூறாமல் சந்நியாசம் கொள்" என்று வள்ளுவர் கூறுகிறார். ஞான புருஷர்களுக்குத் தம்முடம்பும் மிகையாகக் காணப்படும் என்று

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை.

சுதர்மத்தைச் செய்யப் போர்முனையில் அர்ச்சுனர்க்குப் பகவான் கீதை உபதேசம் செய்கிறார். ஈண்டு இயற்பகை அடிகளுக்கும் அவருடைய பத்தினியார்க்கும் அவ்வாறான உபதேசமின்றியே பற்றற்றான் தாளினையே பற்றி வாழ்ந்த தன் காரணமாக எளிதில் அந்நிலையில் தம் தருமத்தைத் தளர்வின்றிச் செய்தனர். ஆக பற்றுவிடற்கு பற்றற்றான் தாளினையே பற்றுக என்று திருவள்ளுவர் உபதேசித்ததன் உண்மை இவ்வரலாற்றில் நன்கு விளங்குகிறது.

தூர்த்தவேடம் பூண்டுவந்த எம்பிரான், இயற்பகையை "மீள்" எனச் சொல்லும் வரை நாயனார் அவரை வழி கூட்டிச் சென்றனர். பின் தன்னில்லாளை விட்டுத் திரும்புகிறோமே என்ற எண்ணம் கொண்டு அன்னவரைத் திரும்பிப்பார்க்கவும் மனமெழா பற்றற்றநிலையில் மீண்டு திரும்புகிறார். துறவு பூண எண்ணிய புத்தரும் இல்லம்விட்டு ஏகும் காலத்து மனைவிமக்களைக் கடைசியாக ஒருதரம் பார்த்துவிட்டு வருவோம் என்ற பாசத்தால் மனச் சஞ்சலப்பட்டாரெனின் இயற்பகையின் பெருமை ஈண்டுச் சொல்லவும் வேண்டுமோ? அதையன்றோ "பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான்" என்று நினைந்து அவரை மீளவும் அழைக்கலுற்றார்.

எவ்வாறு அழைக்கின்றார்? "முனிவா ஓலம் அன்பனே ஓலம் அயற்பிலாதானே ஓலம் செய்தற்கருஞ் செய்த தீரனே ஓலம்" எனப் பல அடைமொழிகளைத் தந்து அழைக்கிறார். இயற்பகையைப் புத்தியில்லாதவர் என்று உலகம் பழிப்பினும், ஆண்டவர் அவரை தீரன், புத்திமான் எனப் புகழ்ந்து கூறுகிறார். கூப்பிட்ட உடன் இயற்பகைமுனிவர் அடிகளுக்கு என்ன நேர்ந்ததோ? என்று அலறி ஓடி வருவதைச் சேக்கிழார் பெருமான் அழகாகப் பாடியுள்ளார்." அடியனேன் வந்தேன்? வந்தேன்! "பிழைத்தவர் உளரேல் இன்னும் பெருவலித்தடக்கை வாளின் இழைத்தவராகின்றார்" என அயர்விலாத் தன்மையில் ஓடி வந்தாராம். இறைவனை அடைய இதனினும் மிக்க பண்பாடு வேறு என்ன வேண்டும்? உரமான உடல்நலம், அன்புகனிந்த உள்ளம், நன்மையான பெருநெறியையே பற்றவேண்டுமென்ற விவேக புத்திநுட்பம் இவையாவும் ஒருங்கே அமையவேண்டுமென்றல்லவோ சமயங்கள் பலவாக உபதேசித்து வருகின்றன. அந்தப் பண்பாடுகள் அமையின் முழுமுதற்கடவுள் சிவபிரான் அப்படிப்பட்ட ஆன்மாக்களின் மும்மலங்களை மோசித்துப் பூங்கமலக் கால் காட்டி ஆட்கொள்கிறார். அதேவிதம் இயற்பகை முனிவர்க்கும் அவர் மனைவியர்க்கும் வெள்ளைவிடைமேல் காட்சி அளித்தனர். தலைவனை விடைமேல் கண்டதும் இருவரும் தொழுது வீழ்ந்தார்.

"சொல்லுவ தறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லையுந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி"

எனப் போற்றி முனிவர் நிற்க "பழுதிலாதாய்! நண்ணிய மனைவியோடு நம்முடன் போது" வென்று அவர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு பொருவிடைப் பாகர் மன்னும் பொற்பொது அதனுட் புகுந்தனர்.



சர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள், Kt., C.B.E.
இலங்கை அமைச்சர், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
49-ம் ஆண்டு நிறைவு விழாத் தலைவர்



திருமதி கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்கள்



உயர்திரு. P. ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்கள்
நீதிபதி, யாழ்ப்பாணம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்த மகா சமாஜம்

## 49-வது ஆண்டு நிறைவு விழா

விருதுநகர்

---

# சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை

(திருமதி S. பாகீரதி அம்மையார், M.A.)

*[26—12—1954]*

*" குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே "*

அறிவுநிறை பெரியோர்களே! அன்பின் சின்னமாம் அன்னையர்களே! கன்னித்தமிழையும், கண்ணுதற்பெருங்கடவுளை அடையும் திருநெறியாம் சைவத்தையும் ஒருங்கே காக்க இருக்கும் இளைஞர்களே! அனைவர்க்கும் என் மனமார்ந்த வணக்கம். தனது சிறப்பிழந்து சீர்குலைந்த சைவத்தையும், தமிழையும் மறுபடியும் தழைக்கச் செய்யப் பாடுபட்டு வரும் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 49ம் ஆண்டு விழாவின் மகளிர்பகுதியைக் கொண்டாட இங்கண் குழுமியுள்ளோம்.

இவ்விழாவினைத் தலைமை தாங்கி நடத்திவைக்கும் பெரும் பேற்றினை, ஆற்றலிலும் ஆண்டிலும் குறைந்த எனக்கு மனமுவந்து அளித்த சைவசித்தாந்த மகாசமாஜத்தார் அனைவர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைப் பன்முறையும் உரித்தாக்குகிறேன். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற நிலையில் ஆவலாய் அண்ணலின் அருட்பணியாம் இதனை மறுக்காது ஏற்றேன். சமய விழாவாம் இது சிறப்புற நடைபெறுவதற்கு உங்கள் அனைவரின் அன்பையும், ஆதரவையும் வேண்டுகின்றேன்.

சங்ககாலத் தமிழன் இன்பத்தை மாந்தினான். பண்பினைப் போற்றினான். கடமையை வழுவாது ஆற்றினான்.

> " எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே "

என்பதற்கேற்பத் தமிழ் ஆடவர் பழியினைப் போக்கிப் புகழினைப் போற்றி வாழ்ந்ததனால் தமிழகம் தலைசிறந்து விளங்கிற்று. கற்பினை அணியாகப் பூண்டு இல்லறத்தை நல்லறமாகத் திகழச்செய்த எண்ணற்ற தமிழ் மங்கையர் அன்று வாழ்ந்தனர். ஆனால் இன்றைய தமிழகத்தின் நிலையோ! இரங்குதற்குரித்து.

புகழெனின் உயிரையும் ஈயும் தமிழன் இன்று பழிச்சொல்லிற்கு ஆளானான். செய்நன்றி கொல்லாத் தமிழன் இன்று தன்னைப் படைத்த - தனக்குப் பகுத்தறிவினைத் தந்த - பரமனையே மறந்து திரிகிறான்.

> " கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின் "

என்று கூறிய வள்ளுவர் வழிவந்த தமிழன் இன்று கடவுளே இல்லை என்று கூறும் அளவிற்குத் தாழ்ந்துவிட்டான். தமிழினத்தின் பழம்பெருமையினை அடுக்குமொழி கொண்டு அழகாகப் பேசும் அன்பர்கள் ஏனோ சங்கத் தமிழர் வாழ்ந்த வாழ்வினைப் பின்பற்ற மயங்குகின்றனர்!

சங்கத் தமிழன் கடவுட் பற்றற்றவன் என்ற தப்பெண்ணம் தற்காலத்தில் மக்களிடையே பரவி வருகிறது. எக்கடவுள் பெயரினைக் கூறினும் " இது ஆரியர் தெய்வம்,



தமிழன் வழிபட்டதன்று" என்று கூறித் தோற்பறைபன்ன நாப்பறை சாற்றும் எண்ணற்ற மக்கள் கூட்டம் நாட்டில் மலிந்துவிட்டது.

அன்பர்களே! சங்கத் தமிழர் இறைவன்பால் இணையிலா அன்பு கொண்டோர் ஆவர். அவர்களின் நாகரீகத்தின் சின்னமாகவே கடவுள் வழிபாடு தோன்றியது. தமிழனின் முதல் இலக்கணமாக இன்று நிலவிவரும் ஒல்காப் புகழ்பெறு தொல்காப்பியத்தில்,

> " சேயோன் மேய மைவரை உலகமும்
> மாயோன் மேய காடுறை உலகமும் "

என்ற அடிகள், மலைநாட்டு மக்கள் செந்நிறம் கொண்ட செம்மேனி எம்மானைத் தொழுதனர் என்பதையும், முல்லை நில மக்கள் மாயோன் என்று கூறப்படும் திருமாலைத் தொழுதனர் என்பதையும் தெள்ளிதின் உணர்த்துகின்றது. புறநானூற்றைப் புரட்டின், ஆங்கு எண்ணற்ற பாடல்கள் சிவபெருமானைக் குறிப்பதை உணரலாம். அகநானூற்றை அலசிப் பார்ப்பின், ஆங்கும் தமிழனின் தெய்வ வழிபாடு சிறக்கத் தோன்றும். ஏன்! பரிபாடல் முருகனையும், மாலோனையும், சிவனையும் போற்றிடும் சிறந்த நூலன்றோ! தமிழ்மறையாம் திருக்குறள் இறைவனை "எண்குணத்தான் வாலறிவன்" என்று வானளாவப் புகழ்கின்றது. கடைச் சங்கநூல்களாம் நெஞ்சை அள்ளும் சிலம்பும், மணிமேகலையும் மக்களின் இறையன்பினை அங்கை நெல்லிக்கனியென அறுதியிட்டுக் காட்டுகின்றன. இவற்றினை அறியாநிலையில் - அறிந்தும் ஏற்காநிலையில் - சங்கத் தமிழனின் உயர்விற்கு இழுக்குத்தரும் வகையில் - சங்கத் தமிழன் கடவுளை அறியாதவன் என்று கூறும் கூற்று ஏற்புடைத்தா? நமது அறியாமையை அறிவிற் சிறந்து வாழ்ந்த நம் முன்னோர் மேல் புகுத்துவதும் நீதியா? இறையன்பே மனிதனை மனிதனாக வாழச் செய்யும். " யாதும் ஊரே, யாவரும் கேளிர் " என்ற சகோதர உணர்வைக் கொடுக்கக்கூடியதும், தன்னலமறறு அனைத்துயிரிடத்தும் அன்புடன் தொடர்புகொள்ளச் செய்வதும் இறை பக்தியே யாகும். பெரியோர்களே! விஞ்ஞான அறிவில் தலைசிறந்துள்ள இன்றைய உலகில் பொறாமைப் பேயும் போரின் அச்சமும் மக்களை வாட்டுவது

ஏதனால் என்பதைச் சிறிதே சிந்தித்துப் பாருங்கள். எல்லா உயிரிடத்தும் இறைவன் உறைகிறான் என்ற அறிவினை இன்றைய மனிதன் பெற்றிருப்பின் அணுகுண்டினை வீசி ஆண்டவனின் நடமாடும் கோயில்களாம் மனித சமுதாயத்தைப் பொசுக்க முற்படுவானா? உண்மையான கடவுள் நம்பிக்கையே களங்கமற்ற அன்பு வாழ்விற்கு வழிகாட்டியாகும் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

நாட்டின் நல்வாழ்விற்கு - உலகத்தின் அமைதிக்கு - சமயம் அவசியம் என்பதை உணரும் காலம் விரைவினில் வந்தே தீரும். இந்தியாவில் இன்று எண்ணற்ற மதங்கள் இருக்கக் காண்கிறோம். தமிழகத்திலும் இதே நிலை நிலவி வருகிறது. ஆதலின் பழந்தமிழன் போற்றிய மதம் எது என்பதையும், அவனால் வணங்கப்பட்ட இறைவன் யார் என்பதையும், அவன் வழிபட்ட முறை எத்தகைத்து என்பதையும் அறிவது நமது கடமையாகும்.

சைவமே தமிழர் சமயமென்பர் அறிஞர். சிவன் என்ற சொல்லே சிந்தைக்கினிய, செவிக்கினிய செந்தமிழ்ச் சொல்லாகும். செம்மை என்ற பகுதியின் அடியாகப் பிறந்த சொல்லே சிவனாகும். "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற தொல்காப்பியத்தின் சொற்றொடர் செம்மேனி யெம்மான் என்று நமது அடியார் பலரும் கூறிய சிவபிரானையே குறிக்கும் எனக்கொள்ளலாம். திராவிட மொழிகளை நன்கு பயின்று அவற்றிற்கு ஒப்பிலக்கணம் ஈந்த பெரியாரும் ஆங்கில நாட்டாரும் ஆகிய (Dr. Caldwell) டாக்டர் கால்டுவெல் "தமிழில் உள்ள அகரத்தின் ஒலியே "சிவம்" என்பதில் உள்ள அகரத்திற்கும் ஆகும் என்று கூறியுள்ளார். சிவம் என்னும் சொல் நன்மை, நேர்மை, சிறப்பு மங்கலம், சுகம் என்ற அனைத்துப் பொருட்களையும் தருவதுடன் செம்மை நிறத்தையும் குறிக்கிறது. "கண்கள் சிவந்தன" என்று கூறும்போது செம்மையைக் குறிக்க "சிவ" என்னும் பகுதி வருவதை அறிஞர்கள் நோக்கவேண்டும். இம்மட்டுமா! "ஓம்" என்று கூறும் மூலமந்திரமும் நமதருமைத் தமிழ்ச் சொல்லேயாகும். "ஓம்பு" என்ற பகுதியின் அடியாகப் பிறந்த சொல்லே "ஓம்" என்ற பிரணவ மந்திரமாகும். "ஓம்பு" என்ற தமிழ்ச் சொல் பாதுகாத்தல் என்ற பொருளைக் கொடுக்கும்.



"ஓம்" என்னும் பிரணவ மந்திரமும் இதே பொருளையே குறிக்கிறது. ஆகவே, சிவன் என்று சைவர் ஏத்தும் இறைவனைக் குறிக்கும் சொல்லும் மந்திரங்கள் அனைத்திற்கும் மேலாய் இருக்கும் பிரணவமந்திரமாம். "ஓம்" என்ற சொல்லும் ஒலியால் மாத்திரம் தமிழாய் இருப்பதோடமையாது பொருளாலும் தமிழையே சார்ந்திருப்பதை நோக்கின் எந்தச் சைவனும் இறும்பூது எய்தியே தீருவான் என்பதில் ஐயமில்லை. ஒலியாலும், பொருளாலும் தமிழாய்த் திகழும் சிவனையும், பிரணவ மந்திரத்தையும் அறியாது வடமொழி என்று வீணில் உரைத்தும், ஆரியர் புகுத்திய தெய்வம் என அறியாது கூறியும் வருவோரைக் கண்டு நகைப்பதா, அல்லது நாணுவதா?

பெரியோர்களே! சைவர் என்று நாம் இன்று யாரைக் குறிக்கின்றோம் என்பதைச் சிறிதே சிந்தித்துப் பாருங்கள். "சைவர்" என்று நாம் இன்று வழங்கிடும் முறையிலேயே சைவத்தின் தலையாய கொள்கை அடங்கிக் கிடக்கிறது. சிவபெருமானை வணங்குவோர் சைவர். இத்துடன் புலால் உணவைப் புறக்கணித்துத் தூயஉணவு உண்பவன் எவனாயினும் அவன் சைவன் என்றே வழங்கப்படுகிறான். காரணம் என்ன? அன்புருவாக அமர்ந்திருக்கும் ஆண்டவனை வழிபடுவோர் பிற உயிரையும் தம் உயிர்போற் போற்றவேண்டும்; அன்பு வழிபாடே சிவவழிபாடாகும் என்பதை இது உணர்த்தவில்லையா?

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே"

என்றார் நமது திருமூலர். கொல்லாமையும் புலால் உண்ணாமையும் சைவத்தின் சீரிய கொள்கைகளாம். இதனை உட்கொண்டே தமிழ்மறை தந்த பெரியார் வள்ளுவர்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

என்று கூறிச் சென்றார்.

"கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

என்று தாயுமானவர் இறைவனை இறைஞ்சுகின்றார்.

அன்பு வழிபாடே திருநெறியாம் சிவநெறி என்பதை மறந்து அந்நியர்தமைப் பார்த்து வேள்வியும் யாகமும் செய்ய முற்பட்டதனால் அன்றோ தமிழகத்தில் பௌத்தமும் சமணமும் தோன்றின! பரமன் பெயரால் வாயில்லாப் பிராணிகளைப் பலியிட மக்கள் முன்வந்த காரணத்தினால் அல்லவா நமது சைவநெறி சீர்குலையத் துவங்கியது! "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண் ணாமை நன்று" என்று வள்ளுவர் வருந்திக் கூறும் அளவிற்குத் தமிழகம் கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் கைவிட்டதால்தான் தமிழகத்தில் 3ம் நூற்றாண்டில் பௌத்தமும் சமணமும் பரவின. அன்பு வழிபாடு கொண்ட தமிழனுக்கு அயல் மதங்கள் ஜீவகாருண்யத்தைப் போதிக்கும் அளவு இழிநிலை ஏற்பட்டது. ஆனால் அவ்விருள் சிறிது நாட்களில் அகன்றது. மறுபடியும் நாயன்மார்களும், அடியார்களும் தோன்றினர். சைவத்தின் உண்மைநிலையை மக்கள் மன்றத்தில் அச்சமின்றி விளக்கினர். நாளும் இன்னிசையால் தமிழ்மொழியே கருவியாக் கொண்டு, களங்கமடைந்த மக்கள் மனத்தை மறுபடியும் ஒளிவிடச் செய்தனர். மறுபடியும் சைவம் தமிழகத்தில் தலைதூக்கிநின்றது. ஆனால் இன்றோ! பின்னோக்கிச் செல்கின்றது. இன்னும் பிற மதங்கள் நம்மவரை நாளும் பிணைக்கின்றதைக் காணலாம். இன்னும் சைவராகிய நாம் வாயளவில் சைவராக நிற்கின்றோம். உண்மையில் அன்புநெறியை ஆதரிக்கின்றோமா? அன்புநெறியை ஆதரித்து வாழ்ந்திருப்பின், ஏன் வாழின், இன்றைய இழிநிலை ஏற்படுமா? ஏழ்மையால் வாடும் நமது மக்களை உண்மை அன்பினால் போற்றின் அவர்கள் புறச்சமயத்தை நாடுவார்களா? தீண்டாமை என்று கூறி நம்மவரை நாமே ஒதுக்கியதால் வந்த வினை அல்லவா இன்றைய நமது சைவத்தின் இழிநிலை?

அன்பர்களே! உண்மைச் சைவநெறி ஜாதி வேறுபாட்டினை ஏற்காது. தீண்டாமைக்கு அங்கு இடமில்லை. பறையர் குலத்தில் பிறந்த நந்தனார் தமது ஒப்பற்ற ஒழுக்கத்தால்



பரமனின் பக்தராக வாழவில்லையா? அவரை இன்னும் சைவம்போற்றவில்லையா? பக்திச்சுவைநனி சொட்டச்சொட்டப் பாடப்பெற்ற பெரியபுராணம் ஜாதி வேறுபாட்டினை- உயர்வு தாழ்வினை - உடைத்தெறிந்து இன்னும் புகழ் பரப்புகின்றதே! வேளாள மரபில் வந்த நாவுக்கரசரை அந்தணர் குலத்துதித்த சம்பந்தர் "அப்பரே" என்று அகங்குளிர அழைத்து அடிபணிந்தாரே! எங்கே சைவத்தில் சாதி வேறுபாட்டிற்கு இடம்? சுந்தரரால் வணங்கப்படும் நாயன்மார்களுள் திருநீலகண்டத்துக் குயவனாரும், இயற்பகை நாயனாரும், எறிபத்த நாயனாரும் இடம் பெறவில்லையா? சைவத்தில் ஜாதியின் பெயரால் உயர்வு தாழ்வு கிடையாது என்பதற்குப் பெரியபுராணம் ஒன்றே போதுமே. இவற்றையெல்லாம் சைவன் மறந்தான். தீண்டாதோர் என்று கூறித் தெய்வத்தைத் தொழ உரிமை மறுத்தான். சமுதாயத்தில் தன்னுடன் சமமாகவாழவிடாது தடுத்தான். இம்மட்டுமா? அடிமையாகக்கொண்டு அவர்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக நின்றான். சைவன் இழைத்த இக்கொடுமைகள் மக்களில் பலரை நம் நெறியைவிட்டு விலகச் செய்தன. அன்பும், ஆதரவும், ஏன் உயர்பதவியும் கொடுத்து வாழ்வாங்கு வாழ வழி செய்கிறோம் என்று எட்டுத்திக்கிலும் பிற மதத்தார் அறைகூவி அழைத்தனர். பசியால் வாடிக் குளிரால் நடுங்கிய ஒருவனுக்கு உணவும், உடையும் கொடுப்போரே தெய்வம் அல்லவா? அதுவே பிறமதத்தின் வளர்ச்சிக்கும் நம் மதத்தின் அழிவிற்கும் அடிகோலிவிட்டது. இவ்விழிநிலை என்று மாறுமோ அன்றுதான் சைவம் தழைக்கும் என்பது உறுதி. அன்பர்களே! சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காகவே தோற்றுவிக்கப்பட்ட சைவ ஆதீனங்கள் இவற்றினை நன்கு உணர வேண்டும். பிற மதத் தலைவர்கள் தன்னலமற்ற சேவையினால் தம் மதத்தை முன்னேற்றும் இக்காலத்தில் "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே" என்று கூறிய சைவ மரபில் வந்த நமது தலைவர்கள் இன்னும் உறக்கநிலையில் உலகினை அறியாது உழைப்பின்றி இருப்பது வருந்தத்தக்கதாகும். ஓரளவு இன்று சைவத்திற்குப் புத்துயிர் பிறந்துள்ளது

ஆனால் அது வளருமா என்ற ஐயமே என்போன்றோர் மனத்தில் நாளும் தோன்றிக் கலக்குகிறது.

நமது ஆதீனத் தலைவர்கள் மக்கள்முன் வருதல் வேண்டும். உண்மைச் சைவநெறியினை உள்ளவாறு உணர்த்த வேண்டும். இன்று ஆராய்ச்சி அறிவில் ஆழ்ந்து கிடக்கும் இளைஞர்களுக்கு இயைந்தவகையில் விளக்கவேண்டும். இன்றைய இளைஞர்கள், "இந்துக்கள் கல்லையும், மண்ணையும் கடவுளெனக்கொண்டு கலங்குகிறார்களே" என்று எண்ணி வருந்துகிறார்கள். போலிச் சமயம் இது எனப் புறக்கணித்துப் பிற மதத்தை நாடுகின்றனர். ஒருசிலர் "கடவுளைக் கண்டவர் யார்" எனக் கூறி நாஸ்திகராக மாறுகின்றனர். இன்றைய நம் இளைஞர் சமுதாயத்திற்குச் சங்கத் தமிழன்மேல் பற்றுண்டு. சங்ககாலத்தைப் போற்றுவதில் அவர்கள் பின்வாங்கமாட்டார்கள் என நம்புகிறேன். அன்பர்களே! சங்ககாலத்தமிழன் தான் உருவவழிபாட்டைத் தோற்றுவித்தான். ஆணும் பெண்ணுமாகக் காட்சியளிக்கும் நம் சிவபிரானை அவனே தன் அறிவின் திறத்தினால் தோற்றுவித்தான். சங்கத் தமிழனை அறிவுடையோன், நாகரீகத்தில் சிறந்தோன் என்று கூறும் இளைஞர்களுக்கு

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவன இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"

என்ற ஐங்குறுநூற்றின் அடிகளையும்,

"நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வர்க் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்"

எனவரும் சிறுபாணாற்றுப் படையின் அடிகளையும் பணிவுடன் நினைவுறுத்த ஆசைப்படுகிறேன். ஆலமரத்தடியில் அமர்ந்திருந்த ஆண்டவனுக்கு நாகம்தந்த அழகிய துணியை ஆய் என்னும் தமிழ் மன்னன் அளித்தான் என்னில் சங்கத் தமிழன் உருவ வழிபாட்டைப் போற்றினான் என்பது பொருந்துமல்லவா! இன்னும் அனைவரும் போற்றும் திருக்



குறள் "இறைவனடி" "தாள் சேர்ந்தார்க்கல்லால்" என்று கூறும்போது உருவ வழிபாட்டைக் குறிக்கின்றதே.

மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய நெஞ்சை அள்ளும் சிலம்பில், "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" என்பது உருவ வழிபாட்டை உணர்த்தவில்லையா? இளைஞர்களே! மனத்தினை ஒருவழிப்படுத்தி ஒரு சிறிதே சிந்தித்துப் பாருங்கள். நமது தமிழகத்தின் பொற்காலம் என்று நீங்கள் போற்றும் அக்காலத்திலே எழுந்ததுதான் நமது உருவ வழிபாடு. தமிழனின் அறிவின் சின்னமாகவும், நாகரீகத்தின் எடுப்பாகவும், பக்தியின் பெருக்காகவும் விளங்கிடும் இவ்வழிபாட்டினை அறியாது இகழ்தல் நீதியா?

சிவபிரானின் திருவுருவக்கோலம் தமிழனின் பண்பட்ட அறிவின் வெளியீடாகும். எம்பிரானின் திருமுடியினை நினைத்துப் பாருங்கள். கங்கையும் பிறைமதியும் கவினுடன் விளங்கும் சடாமுடி எதனைக் காட்டுகின்றது? விண்ணில் உலவும் மேகம் சடாமுடியினையும், மேகத்தின்கண் இருக்கும் மழைநீர் கங்கையையும், மேகத்தின் ஊடே ஒளிவிடும் பிறைச்சந்திரன் பிறைமதியையும் காட்டும் அழகினை என்னென்றுரைப்பது! ஆகாயமே அவனது முகம். விசும்பில் இடைவிடாது ஒளிபரப்பும் ஞாயிறும், திங்களும். நக்ஷத்திரமும் அவனது முக்கண்களாகும். இறைவனின் உருவம் மண்ணிலிருந்து விண்வரை உயர்ந்துள்ள மலையின் உருவமேயாகும். இதனாலன்றோ மலையில் இருக்கும் பொருட்கள் அனைத்தையும் சிவபெருமானிடத்திலும் காண்கின்றோம்? சிவபிரான் தனது திருக்கையில் மான் கன்று கொண்டிருப்பதும், ஏற்றுக்கொடி ஏந்தி நிற்பதும், இடுப்பில் புலித்தோல் ஆடை புனைந்திருப்பதும், மேனி முழுதும் பாம்புகளைப் பூண்டிருப்பதும் மலையின் காட்சியைக் காட்டவில்லையா? மலையை அடுத்துள்ள நிலமே காடும் காடு சார்ந்த இடமும் ஆகிய முல்லைநிலம். எங்கணும் பசிய நிறந்தோன்றப் பரவசம் தரும் இக்காட்சியே அம்மைவடிவாய் இறைவனின் ஒருபாகத்தை அலங்கரித்துள்ளது. மாதொருபாகன் என்ற தத்துவம் இதனையே உணர்த்தும். முல்லை நிலத்தை அடுத்துள்ள நிலமே வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதமாகும். மனதிற்கு மகிழ்வளிக்கும் கலைகளுக்கு உறைவிடம் மருதமேயாகும். மாட மாளிகை

களுடன் நாகரீகத்தில் எடுப்பாக விளங்கும் இதனைக் காட்டுவதே கண்ணுதற் பெருங்கடவுளின் தூக்கிய திருவடியாகும். நெய்தல் நிலத்தை ஒப்பவே அவனது ஊன்றிய திருவடி, கடல் அலையின் ஓயா ஒலிபோல் சிலம்பின் ஒலியைக் கொண்டு திகழ்கின்றது. இவ்வாறு விண்ணும், மண்ணுமாகி நிற்கும் உருவினை - ஆண் பெண் உருவுடன் அழகுடன் பொலிவுறும் வடிவினை - உண்மைத் தத்துவத்தை உணரா நிலையில் கல்லென்றும், மண்ணென்றும் கூறி மயங்கலாமா ?

உருவ வழிபாடு தோன்றிய அன்றே திருக்கோவில்களும் எழுப்பப்பட்டன. ''ஆலமர் இறைவன்'' என்ற சிறுபாணாற்றுப்படையின் சொற்றொடர், இறைவனை முதலில் ஆலமரத்தினடியில் வைத்து வழிபட்டனர் என்பதை உணர்த்துகிறது. நாகரீகம் பெருகப் பெருக மனிதன் தனக்கு மாடமாளிகைகளைக் கட்டிக்கொண்டு வாழ முற்பட்ட அன்றே தன்னைப்படைத்த இறைவனுக்கும் தனது நன்றியின் அறிகுறியாய்க் கோயிலைப் படைத்தான். உள்ளக் கோயிலில் உறையும் இறைவனைப் புறக்கோயிலில் வைத்துப் பூசிக்க விழைந்தான். எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளை ஓரிடத்தில் வைத்துத் தனது மனத்தினையும் ஒருவழிப்படுத்த முற்பட்டான். அவன், அவள், அது என்று அறுதியிடமுடியாத பரம்பொருளை - எந்நிறத்தன், எவ்வண்ணத்தன் என்று யாரும் சாற்றமுடியா முதல்வனை - அறிவின் துணையினால் உருப்படுத்தி, அவ்வுருவினை மாசற்ற இடத்தில் வைத்து வழிபட்டான். அடியார்க்கெளியனாகவும், கருணையின் கடலாகவும் இருக்கும் இறைவன் காதலினால் தன் மக்கள் சமைத்த உருவத்திலும், அவர்கள் கட்டிய கோவிலிலும் உறையாமலிருப்பானா ? இறைவன் உறையும் மாசற்ற இடத்திலேயே களங்கமில்லாத ஓவியக் கலையையும் சிற்பக் கலையையும் போற்றி வளர்த்தனர். நாகரீக உலகம் நாடும் இசையையும் நடனத்தையும் நாளும் காத்து வளர்த்தது நமது திருக்கோயில்களேயாகும். அன்று நம் திருக்கோயில்கள் ஓவிய மன்றங்களாகவும், சித்திரக்கூடங்களாகவும், ஏழைகளுக்கு உணவுதரும் அன்ன சத்திரங்களாகவும் அழகுடன் திகழ்ந்தன. இளஞ்சிறார்களுக்கும் முதியோர்களுக்கும் அறிவினைப் பெருக்கும் அறிவுக்கூடம் நமது கோயிலே. இம்மட்-



டுமா! நாட்டின் மூலபண்டாரமும் (Reserve Bank) அன்று நம்கோவிலேயாகும். ஆனால் இன்றோ! மாசற்ற இறைவன் உறையும் இடம் மாசுபடிந்திருக்கக் காண்கின்றோம். பரமன் வாழும் இடத்தில் பாவ காரியங்கள் பல நிகழப் பார்க்கின்றோம். கோவில்களில் ஆற்றவேண்டிய பணியை மறந்து வாழ்நாளை வாளா போக்குவதால்தான் இன்றைய மக்களில் ஒருசிலர், கண்ணிற்காணாத கடவுளுக்கு இவ்வளவு பெரிய இடம் எதற்கு என்று கூக்குரல் எழுப்ப முற்பட்டுவிட்டனர். திருக்கோயில்களின் சொத்தினை ஏழை மக்கள் சமுதாயத்திற்கும், ஏற்கும் நல் வழியிலும் செலவிடாததினாலன்றோ இன்று 'கோயிலின் பெயரால், கடவுளின் பெயரால் சொத்து எதற்கு' என்று பகுத்தறிவாளர் கேட்கின்றனர். இவ்வினாக்களெல்லாம் எழும்புவதற்கு இடமளித்த ஊழல்கள் விரைவினில் துடைக்கப்படவேண்டும். கோயில்கள் அனைத்தும் மறுபடியும் முன்போல் ஏழைகளுக்கு உதவும் நிலையங்களாகவும், அனைத்துக் கலைகளையும் போற்றி வளர்க்கும் கலைக்கூடங்களாகவும் மாறவேண்டும். ஊழல்களைப் போக்கி உயர்வான கலைகளையும், ஒழுக்கத்தையும் வளர்க்கப் பாடுபடாமல், கட்டிவைத்த கோயிலை இடிப்பது தமிழனின் நாகரீகச் சின்னத்தையே சிதைப்பது போலாகும். தமிழன் சமயம் சைவம் எனக் கூறின், தமிழன் ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும் எனக் கொண்டவன் எனக் கூறின், இன்று எண்ணற்ற கடவுள் பெயர் நம்மிடையே நிலவக் காரணம் என்ன என்று சிலர் கேட்கலாம். தமிழர்கள் விஷ்ணுவைப் போற்றுகின்றனர். முருகனை வழிபடுகின்றனர். பிள்ளையாரைத் துதிக்கின்றனர். பொருந்துமா ஒருவனே தெய்வம் என்ற கூற்று ?

அன்பர்களே! இவ்வினாவிற்கு விடைகாண வேண்டுவது மிக இன்றியமையாததாகும். திருமால் வணக்கம் தோன்றியதெவ்வாறு ? ''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்ற தொல்காப்பியர் கூற்றினை இங்கும் நினைவுகூறுங்கள். சிவபிரானின் ஒருபக்கம் அம்மையின் வடிவென்றும், அவ்வடிவின் நிறம் பசுமை என்றுங் கூறினேன். மாயோன் எனின் இருண்ட நிறமுடையோன் என்பதே பொருள். திருமாலின் நிறத்தினைக் கூறவந்த [illegible]ழ்வார் ''பச்சை மாமலைபோல் மேனி'' என்று கூ[illegible] திருமாலுக்கு,

186908

"அலங்காரப் பிரியன்" என்ற பட்டத்தையும் சூட்டியுள்ளோம். திருமால் கோயில்களில் இன்றும் சுவைக்கினிய பிரசாதங்களும், கண்ணிற்கினிய அலங்காரங்களும் காணலாம். ஆடையும், அணியும், உணவும் விரும்புவது பெண்ணினம் அல்லவா? பெரியோர்களே! அன்பின் உருவாகவும், காக்கும் தொழிலையே புரியும் தன்மை உடையோளாகவும், பசிய நிறம் படைத்தோளாகவும் இருக்கும் நமது அன்னை வழிபாடே இன்று திருமால் வழிபடாக மாறி இருக்கவேண்டும் என்று அடியேன் கருதுகின்றேன். "அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயில் மண்ணு" என்று வழங்கும் பழமொழியும் இதனைக் குறிக்கவே எழுந்தது போலும். "மாயோன்" மேய காடுறை உலகமும் என்று கூறப்பட்டுப் பிற்காலத்தில் அது மாயோன் எனத் திரிந்து, பின்னும் வடமொழிக் கலப்பால் அது மகாவிஷ்ணுவாக மாறியிருக்கலாம் என்று என் சிற்றறிவிற் படுகிறது. அனுபவமும் அறிவும் பெற்ற பெரியோர் இதனை ஆராய்தல் வேண்டும்.

அடுத்தாற்போல் முருகன் என நாம் வழிபடும் இறைவன் பெயரும் நமது சிவபிரானையே குறிக்கும். முருகு என்னும் தமிழ்ச்சொல் அழகு இளமை என்ற பொருளைத் தரும். அழகும் இளமையுங் கொண்டோன் இறைவன் என்பதைக் குறிக்கப் பக்தர்கள் முருகன் எனக் கூறிப் போற்றினர். ஓவியனோ அழகும் இளமையும் ததும்பும் உருவத்தைக் கல்லில் படைத்தான். மதுரையில் இருக்கும் மீனாட்சி திருவுருவும், கன்னியா குமரியின் தவமியற்றும் குமரியின் திருவுருவும் எப்படி அன்னை ஒருவளையே குறிக்கின்றனவோ அவ்வாறே சோமசுந்தரக்கடவுளின் திருவுருவும் முருகன் திருவுருவும் ஒருவனையே குறிக்கும் என்பதில் ஐயமில்லை. எப்பெயரில் எவ்வுருவில் வழிபட்டாலும் அவையனைத்தும் முழுமுதற் கடவுளாம் சிவபிரான் ஒருவனையே சாரும்.

முருகனுக்கும் வள்ளியை மனைவியாகக் கொண்டோம். ஏன்? ஆணும் பெண்ணும் கலந்தே உலகம் நடத்தவேண்டும் என்னும் கொள்கையினால் அன்றோ? வீரமும் அன்பும் ஒருங்கே இணைந்ததே இன்பம் என்பதைத் தமிழன் நம்பினான். தமிழன் முதன் முதல் ஆக்கிய இறைவனின் உருவம் மாதொரு பாகன் தோற்ற மாட்சி உடையது. தமிழன்



கண்ட சைவமதம் இல்லறத்தைப் போற்றும் நன்மதமாகும். இதற்கு எதிராகத் தோன்றி, பெண்ணினத்தை இழிவுபடுத்திக் கடுந்துறவினைப் போற்றிய பௌத்தமும் சமணமும் நாட்டில் வாழமுடிந்ததா? "அறமெனப்பட்டதே இல் வாழ்க்கை அஃதும் பிறன் பழிப்ப தில்லாயினன்று" என்று கூறினார் வள்ளுவர். உடம்பினை வெறுத்து வாட்டிடும் நிலையினைத் தமிழன் வெறுத்தான். அதிலும் சைவன் அறவே வெறுத்தான். உடம்பினை ஓம்பினால்தான் அதனுள் உறையும் இறைவனை அறியமுடியும்? உடம்பன்றோ உயிரைக் காப்பது? உயிர் இன்றேல் அறிவினைப் பெருக்கி அதன் வழியாய் ஆண்டவனை அடையமுடியுமா? ஆதலின் சைவன் உடல் உயிர் இவற்றின் சேர்க்கையை விரும்பினான். இதுவும் அவனது துறவு வெறுப்பிற்கு ஓர் காரணமாகும். சங்ககாலப் பெருமக்கள் மணவாழ்வில் ஈடுபட்டதும், அடியார் பலர் இல்லறத்தில் இருந்ததும் இதனாலன்றோ! பக்தியிற் சிறந்த திருமூலர்

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"

என்று பாடியிருப்பதும், 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்ற கொள்கையைச் சைவன் ஏற்கவில்லை என்பதை உணர்த்துகின்றதல்லவா?

தமிழனின் துறவறம் ஆரியர் கண்ட சந்யாசத்தினின்றும் முற்றிலும் வேறுபாடுடையது. தமிழனின் துறவு அன்பு நெறியினின்றும் அருள் நெறியைப் பின்பற்றுதலேயாகும். இல்லறத்தில் முகிழ்த்த அன்பு அருளாக மலரும் போது துறவு நிலை என்று கூறுகிறோம். அருளென்னும் அன்பு ஈன்ற குழவி இல்லறத்தானுக்கு ஏற்படும் ஆண்டவன் அருளைக்கொண்டே யான், எனது, என்னும் பற்றினை அகற்றி, தன்னலமாகிய உலகமாயையை ஒழித்து, மாசற்ற பதியினைச் சேர அழைப்பதே நமது சைவநெறி. தன் உயிருடன் ஒன்றாகக் கலந்து நிற்கும் ஆண்டவனை அறிந்தவனே சைவனாவான். அவ்வாறு உணர்ந்தோன் அனைத்

துயிர்களிடத்தும் ஆண்டவனைக் காண்பான். ஆண்டவன் உறையும் உயிர்களைக் கொல்லவோ, கொன்றதைத் தின்னவோ முற்படான்.

நாவுக்கரசர், ஐயாற்றில் ஆண் பெண்ணாகக் கலந்து நின்ற அனைத்துயிர்களிடத்திலும் செம்மேனி எம்மானை மாதொரு பாகத்துடன் கண்டார். எல்லா உயிரிடத்தும் இறைவன் மறைந்து உறைகிறான் என்று அறிந்தமையால் அன்றோ நமது அன்பின் கனியாம் ஞானசம்பந்தரும் அருட் கனியாம் அப்பரும் மக்களின் இன்னல் போக்கி இன்பம் திளைக்கப் பாடுபட்டனர். மக்கள் வறுமையில் வாடியது கண்டு கலங்கிக் கடவுளிடம் பொற்காசு பெற்றதும் இதனாலன்றோ! அன்னை வழிபாட்டினைக் கொண்டவன் பெண்ணினத்தைப் போற்றுவான். பெண்ணினம் போற்றப்படின் நாடு நலமுடன் ஓங்கும் என்பதில் ஐயமும் உண்டோ !

அன்பர்களே ! உண்மைச் சைவநெறி ஓங்குமானால், ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும் என்ற கொள்கை நாட்டில் நிலவும் ; அன்பு பெருகும் ; அருள் தழைக்கும். அன்பும் அருளும் இருப்பின் மக்கள் வறுமையால் வாடவோ, இன்னற்பட்டு இரங்கவோ இடமிருக்குமா ! ஆகவே சைவம் தழைக்க - தமிழன் கண்ட உண்மைநெறி ஓங்க - உழைக்கவேண்டும்.

அன்னையர்களே ! தமிழகத்தில் அன்றுதொட்டு இன்று வரையிலும் மதத்தினைக் காத்தவர் மகளிரே யாவர். ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று போற்றப்படும் பாண்டிநாட்டினை அமண் சமய இருளினின்றும் அகற்றிக் காத்தவர், நமது இனத்தில் உதித்த மங்கையர்க்கரசி அன்றோ ! தனது அன்பினாலும் அறிவின் திறத்தினாலும் தனது காதற்கணவனாம் பாண்டியனை நன்னெறி புகுத்தினாள். இதனாலன்றோ சேக்கிழார் பெருமான் ''மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்'' என்று மனமார வணங்குகின்றார்.

சைவத்தின் தூணாகவும், ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்'' என்று வீரமொழி பேசிய வீரராகவும் மாறிய நாவுக்கரசரைச் சைவத்திற்கு ஈந்தவர் பெண்கள் திலகமாம் திலகவதியார் அன்றோ !



மற்றும் தெய்வபக்தியில் திளைத்தும் கணவனுக்காகத் தன் கவினுறு உடலைப் பேணியும் வளர்த்த காரைக்காலம்மையார் கணவன் தன்னைத் துறந்ததும் கவினுறுமுடலை மாற்றிப் பேயுருக்கொண்ட பெண்மையின் வெற்றியைக் கூறவும் வேண்டுமோ ! 63 நாயன்மார்களின் சிறப்புடை வாழ்வு அவர்கள்தம் அன்பு மனைவியர் இன்றேல் திகழ்ந்திருக்குமா !

இன்றும் நம் மகளிர் சைவத்தை ஏத்துகின்றனர்; அதனது உயர்விற்குப் பாடுபடுகின்றனர் என்பதை இவ் விழாவே விளக்குகின்றது. ஆண்டிற்கு ஒரு விழா எடுத்து மகிழ்வதோடு நில்லாமல், அன்றாடவாழ்வில் நாம் மங்கையர்க்கரசிகளாகவும், திலகவதிகளாகவும் திகழ முற்படவேண்டும். உணவைக் கொடுத்து உடலை வளர்ப்பதே மகளிர் கடமை என எண்ணாது அறிவைப் புகட்டி ஆன்மாவை நல்வழிப்படுத்துவதும் நம் கடமை என்பதை அன்னையர் மறவாது வாழவேண்டும். குடும்பத் தலைவர்களையும் வருங்காலப் பெரியோர்களையும் பிறமதம் புகும்படியாகவோ, அன்றி நாஸ்திகர்கூட்டத்தில் கலக்கும்படியாகவோ விடாது போற்றுங்கள். ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால் அல்லவா! சைவம் வாழவேண்டின் மகளிர் சமுதாயம் முன்வரல் வேண்டும். அறிவும், அன்புள்ளமும் கொண்டு நமது நெறியினை வளர்க்க முயலவேண்டும்.

பெரியோர்களே ! சைவம் வாழச் சில வழிகளைக் கூறி எனது உரையினை முடிக்க எண்ணுகிறேன். உண்மை நெறியினை மக்களுக்கு உள்ளவாறு உணர்த்த அறிஞர்கள் முன்வரல்வேண்டும். நமது செல்வம் கொழிக்கும் ஆதீனங்களும், கோயில்களும் ஏழைகளின் வறுமையைப் போக்கவும், மக்களுக்கு அறிவு புகட்டவும் முற்படவேண்டும். பள்ளிகளும் கல்லூரிகளுமே மதம் வளர்க்கும் இடம் என உணர்ந்த பிறமதத்தார்போல் நம்மவரும் நம் சமயக் கல்லூரிகளை ஆங்காங்கு நிறுவவேண்டும். கல்விக்கூடங்களில் வேற்றுமையை அகற்றும் அன்பினைப் பெருக்கும் சைவ நெறியினைப் புகட்டல்வேண்டும். அனைத்திற்கும் மேலாய், ஆண்டவன் உறையும் அனைத்திடங்களிலும் அன்னைத் தமிழ் மணம் கமழவேண்டும். நமக்குப் புரியா அந்நிய மொழியில் பூசனை நடப்பது ஒழியவேண்டும். கல்லும்

கரையும் திருவாசகமும், காதிற்கினிய தேவாரப்பாடல்களும் நமது திருக்கோயில்களிலே முழங்கவேண்டும். விரைவினில் நமது மக்களின் வறுமையைத் துடைக்காதும், அவர்களின் அறிவைப் பெருக்காதும் வாளா இருப்பின் இன்னும் சில ஆண்டுகளில் சைவம் சிதையும் என்பதில் ஐயமில்லை. சைவத்தைக் காக்க முற்படாது மதத்தின் பெயரால் - அதுவும் சைவத்தின் பெயரால்-மக்களுக்கு இன்னலைக் கொணர்வது அறிவுடைமையன்று. பக்தியின் பெயரால் மக்களை உணர்ச்சி வயப்படச் செய்து, அடி, உதை வாங்கச்செய்வது சைவத்திற்கு இழுக்காகும். ஆதலின் பெரியோர்களே! ஒழுக்கத்தில் நின்று அறிவின் திறன்கொண்டும், அன்பு நெறி கொண்டும், அனைவரையும் "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" எனக்கொண்டு சிவநேசச் செல்வர்களாக மாற்ற உழைப்போம். இறைவனும் நம் பக்கல் நின்று அருள்வானாக! வணக்கம்.

# 49-ம் ஆண்டு அறிக்கை

## (1-12-1953—30-11-1954)

சைவ சித்தாந்த மகா சமாஜம் 1905-ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவப் பெற்றது. சென்ற ஆண்டுத் தொடக்கத்தில் அங்கத்தவர் தொகை 538, ஆண்டு முடிவில் 584.

இச்சமாஜத்தின் தலையாய நோக்கம் சைவசமயத்தைப் பரவச்செய்வது. அதற்கு இன்றியமையாச் சாதனமாகத் தமிழ் மொழியை வளர்ப்பதும் இதன் நோக்கமாகும். இந் நோக்கம் நிறைவேறுதற்காகச் சமாஜம் புரிந்துவரும் பல பணிகளுள் முக்கியமானவை: 1. 'சித்தாந்தம்' எனும் மாதாந்தரப் பத்திரிகை வெளியிடல். 2. சைவசமய நூல்களை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்கல். 3. சமயச் சொற்பொழிவுகள் செய்வித்தல். 4. சைவ சமய நூல்களில் தேர்தல் நடத்தி, தேறியவர்களுக்குச் சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் பட்டமளித்து, இந்த முறையிலும் எல்லோரும் சைவசமய நூல்களைக் கற்க ஊக்குவித்தல்.

**பத்திரிகை:** சித்தாந்தம் எனும் திங்கள் வெளியீடு 27 ஆண்டுகளாகச் சமாஜ உறுப்பினர்க்கு வேறு கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றது. கட்டணம் உள்ளூர் ரூ. 3-0-0; வெளியூர் ரூ. 4-0-0 ஆகும். **நூல்கள் வெளியீடு:** சைவத் திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும், சீவக சிந்தாமணி முதலிய பிற சமய நூல்களும், சங்க இலக்கியங்களும், ஆக இதுவரை வெளிவந்துள்ள நூல்களின் படிகள் ஏறக்குறைய நூறாயிரமாகும். திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சிப் பாசுரங்கள் உரையுடன் சமாஜத்தின் ஏழாம் பதிப்பாக அடக்கவிலைக்கு இவ்வாண்டில் வெளியிடப்பட்டன.

**மகாநாடுகள்** : சைவர் மாநாடு, 25, 26, 27—12—1953 தேதிகளில் சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகானந்த நிலையத்தில், யாழ்ப்பாணம் வழக்கறிஞர் உயர்திரு. வே. நாகலிங்கம் பிள்ளை, J.P.U.M. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சைவ மங்கையர் மாநாடு 26—12—1953 திருமதி. மரகதவல்லி சிவபூஷணம், B.A.,B.T. அவர்கள் தலைமையிலும், சைவ இளைஞர் மாநாடு 27—12—1953 டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, M.A., Ph.D. அவர்கள் தலைமையிலும் நடைபெற்றன.

சமாஜ உறுப்பினர் கூட்டங்கள் : இவ்வாண்டில் சமாஜச் செயற்குழுக் கூட்டம் ஐந்தும் உறுப்பினர் பொதுக் கூட்டம் பத்தும் நடைபெற்றன. சமயப் பிரசாரப் பொதுக் கூட்டங்கள : திருவான்மியூர், திருப்போரூர், பல்லாவரத்தையடுத்துள்ள திரிசூலம், திருநாவலூர், திருவாலங்காடு, இராணிப்பேட்டை ஆகிய ஊர்களில் சமயப் பிரசாரப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. விசேஷக் கூட்டங்கள் : மயிலை கபாலீச்சுரர் ஆலயத்தின் பிரம்மோற்சவத்திற்கு வந்திருந்த தேவார ஓதுவார் மூர்த்திகளைப் பாராட்ட ஒரு கூட்டமும், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேக்கிழார், மெய்கண்டார் திருநாட்களைக் கொண்டாடப் பொதுக்கூட்டங்களும் சென்னையில் நடைபெற்றன.

**சைவப்புலவர் தேர்வு** : சமாஜம் நடத்தும் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகளுக்கு இவ்வாண்டு விண்ணப்பித்தவர் எழுவர். இவர்களில் தேர்ச்சிக்கு வந்தவர் ஐவர். அனைவரும் தேர்ச்சியுற்றோர்கள் ; சைவப்புலவர் இருவர் ; இளஞ்சைவப்புலவர் மூவர். விவரம் கீழ்க்கண்டவாறு :—சைவப்புலவர் :—முதல் வகுப்பு : திரு. க. பொன்னம்பலம், கொழும்பு; இரண்டாம் வகுப்பு : பண்டிதர்-திரு. பொ. இராமுபிள்ளை, அகத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி, யாழ்ப்பாணம். இளஞ்சைவப் புலவர் :—முதல் வகுப்பு : திரு. தி. புன்னைவனம் பிள்ளை, நாகர்கோயில் ; இரண்டாம் வகுப்பு: திரு. எம். இ. கிருட்டினசாமி, வள்ளலார் மாணவர் இல்லம், வாலாஜாபாத் ; மூன்றாம் வகுப்பு : திரு. பூ. அனுமந்தன், ஆசிரியன், இ. ம. பாடசாலை, வாலாஜாபாத்.



**வரவு செலவு கணக்கு** : 49-ம் ஆண்டு (1—12—53 முதல் 30—11—54 வரை) வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு கீழே தரப்படுகின்றது. ஆண்டின் இறுதியில் இந்தியன் பாங்கியில் இருப்பு ரூ. 559-13-1 அடக்க விலைப் பதிப்பாகிய பெரியபுராணம், திருப்போரூர்ச் சந்நிதிமுறை முதலியன விற்பனைக்குக் கையிருப்பாயிருப்பனவற்றின் விலை மதிப்பு ரூ. 4500-0-0

**வேண்டுகோள்** : மேற்கூறிய பெரிபுராணம், திருப்போரூர்ச் சந்நிதி முறை முதலிய அடக்க விலைப்பதிப்புகள், வியாபாரமுறையில் கழிவு முதலிய சலுகைகள் இன்மையால் விரைவில் விற்பனையாகாது இருக்கின்றன. இவற்றில் ரூ. 4500/-முடங்கிக்கிடத்தலால், அவசியமான வேறு நூல்கள் வெளியிடுவது இயலாததாகிறது. சைவப்பெருமக்கள் தம் குடும்பத்தில் சமாஜப் பதிப்பு யாவும், ஓய்ந்த போதேனும் படித்துப் பயன் பெறுதற்கென, இருக்க வேண்டுமென மனங்கொண்டு இந்நூல்களை வாங்கத் தலைப்பட்டால் விரைவில் இவை செலவாகி, வேறு நூல்கள் வெளிவரவும் ஏதுவாகும். இதைச் சைவ அன்பர்கள் கவனிப்பார்களாக.

இந்தியா சமயப் பற்றற்ற அரசுரிமை பெற்றிருக்கிற இந்நாளில், சைவர்களின் சமயவாழ்வைப் பாதுகாக்கவும் வளம்படுத்தவும் மடாலயங்களும், அறநிலையங்களும் துணைபுரிந்தாலும், பொதுமக்களின் சார்புடையதாகிய சைவசித்தாந்த மகாசமாஜம், தொடர்ந்து மகத்தான பணியாற்றிவர

வேண்டுவது முன்னிலும் இப்பொழுது இன்றியமையாத தாகிறது. இதற்கு அஸ்திவாரம் அங்கத்தவர் ஆவர். சுமார் ஐம்பது ஆண்டுகள் சைவ சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் தளராது தொண்டுபுரிந்துவரும் இத்தலைமை ஸ்தாபன மாகிய சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்தது ஐயாயிரமாவது இருக்கவேண்டாமா? ஆண்டுக்கு ரூபாய் மூன்று சந்தா செலுத்திச் சித்தாந்தம் பத்திரிகையை இலவசமாகப் பெற்று, சைவ உலகத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனிப்பது ஒவ்வொரு சைவக் குடும்பத்திற்கும் தலையாய கடமையல்லவா?

**நன்றி:** இம்மகா சமாஜத்திற்கு எல்லா வகையிலும் உதவிபுரிந்த உறுப்பினர் செயற்குழுவினர் ஆகியோருக்கும், இதன் கூட்டங்களை நடத்திக்கொள்ளத் தம் 'குகானந்த நிலயத்தில்' இடம், விளக்கு முதலிய வசதிகளளித்த சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையினருக்கும், சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகளை நடத்தித்தந்த பரீட்சாதிகாரிகட்கும், மேற்பார்வையாளர்களுக்கும், சித்தாந்தம் முதலியவற்றைச் செம்மையாக அச்சிட்டுத் தந்த சாது அச்சகத்தினர்க்கும், வெளியூரில் சமாஜத்தின் சமயப் பிரசாரக் கூட்டங்களை நடத்தித் தந்த அன்பர்களுக்கும், அவற்றில் சொற்பொழிவாற்றிய பெருமக்களுக்கும், பொதுவாக சமாஜ அன்பர்கள் யாவர்க்கும், சைவசித்தாந்த மகாசமாஜம் தன் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

இங்ஙனம் :
ச. சிவகுமாரன்,
காரியதரிசி.

## சமாஜ 49-ம் ஆண்டின் வரவு செலவுக் கணக்கு
(1-12-1953 முதல் 30-11-1954 வரை)

| வரவு | ரூ. | அ. | பை | செலவு | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| நன்கொடை | 300 | 8 | 0 | நன்கொடை: திரு.வி.க மணிமண்டபம் | 100 | 0 | 0 |
| சந்தா | 1212 | 0 | 0 | சித்தாந்தம் காகிதமும் அச்சுக்கூலியும் | 865 | 6 | 9 |
| தேர்வுக் கட்டணம் | 10 | 0 | 0 | ,, ராப்பர், கூட்டங்கள், | | | |
| புத்தக விற்பனை | 678 | 2 | 0 | பேனு புத்தகம் முதலியன | 114 | 12 | 0 |
| தபால்வகை | 126 | 10 | 0 | வெளியீடும் பிறபுத்தகங்களும் | 300 | 7 | 0 |
| காணுவகைகள் | 25 | 0 | 0 | தபால்வகை | 362 | 13 | 0 |
| பாங்க் வட்டி | 24 | 15 | 11 | போக்குவரவு | 95 | 11 | 6 |
| மாநாட்டுத் தலைவர் பிரயாணச்செலவு | | | | பிளாக்குகள் | 7 | 8 | 0 |
| தபாலாபீசால் திருப்பப்பட்டது | 110 | 0 | 0 | லிகிதர் சம்பளம் | 20 | 0 | 0 |
| இந்தியன் பாங்க் | 2319 | 11 | 0 | கொட்டகை செலவு | 50 | 0 | 0 |
| ஆரம்பக் கையிருப்பு | 25 | 0 | 9 | பிறவகைகள் | 300 | 0 | 0 |
| | | | | 48ம் ஆண்டுவிழா | 930 | 4 | 3 |
| | | | | மாநாட்டுத் தலைவர் பிரயாணச்செலவு | 110 | 0 | 0 |
| | | | | இந்தியன் பாங்க் | 1134 | 10 | 2 |
| | | | | முடிவில் பொருளாளரிடம் கையிருப்பு | 440 | 7 | 0 |
| மொத்தம் | 4831 | 15 | 8 | மொத்தம் | 4831 | 15 | 8 |

S. T. அரசு,
ஆண்டுக் கணக்குப் பரிசோதகர்.

ச. சிவகுமாரன்,
காரியதரிசி.

தி. க. சுந்தரம் பிள்ளை
பொருளாளர்.

# சைவர் மாநாட்டுத் தலைமையுரை

ஸர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்

(மலர் - 28 ; இதழ் - 1 ; 28-ம் பக்கத் தொடர்ச்சி)

## பழைய சைவத்தின் சாரமும் வள்ளுவரும்

தொன்மையானது என்னும் ஓர் காரணத்தினால் மட்டும் சைவம் பெருமையடையவில்லை; அதன் சித்தாந்தத்தின் தத்துவங்களுக்காக மாத்திரம் அது சிறப்புறவில்லை; தொன்றுதொட்டு இன்றுவரைக்கும் அது பேணிவந்த அன்பு, சீவகாருணியம், சமரசம் ஆகிய மூன்றும் தொன்மையுடனும், தத்துவ நுட்பங்களுடனும் சேர்ந்தே சைவத்திற்கு உயர்வு கொடுத்து, அந்த உயர்வைக் காப்பாற்றி வந்துள்ளன. அன்பும் சிவமும் ஒன்றெனப் பேணிய காலத்தில் எல்லாம் தமிழ்நாடு சிறப்புற்றிருந்ததையும், அன்பும் சிவமும் வேறென்று அறியாமை பரவியபோதெல்லாம் சமய நிலை சீர்கெட்டதோடு நாட்டில் வளங்குன்றி அரசர்கள் வீழ்ச்சியடைந்ததையும் தென்னாட்டின் சரித்திரவாயிலாக அறிகின்றோம்.

ஆதி மனிதனும் தமிழன் வாழ்வின் நாகரிக ஏணியின் முதற்படியில் கால்வைத்த காலந்தொட்டுப் பேணிவந்த பெருங்குணம் ஒன்றுண்டு. அது என்னவெனில், மெய்ப்பொருளைப் பற்றிய ஆராய்ச்சியிலோ அல்லது வாழ்வின் வேறெந்தத் துறையிலோ சரி அறிஞர் உலகில் இருந்து எப் புதிய கருத்துத் தோன்றினாலும், அதைத் தாராளமான உள்ளத்துடன் ஆராய்ந்து உண்மை கண்டு பிடிப்பதாகும். கிணற்றுத் தவளையின் மனப்பான்மைக்குத் தமிழன் பண்பாடு முற்றிலும் முரண்பாடானதாகும். இச்சீரிய குணத்தைப் பாராட்டி அதனை என்றென்றைக்கும் நிலைபெறச் செய்யத் தோன்றியவையே பின்வரும் வள்ளுவரின் மணிமொழிகள் :—

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "



அப்பெருமகன் எம்மதத்தினரும் ஏற்றுக்கொள்ளும் தன்மையில், இறைவனை ' பகவன் ', ' வாலறிவன் ', ' ம்லர்மிசை ஏகினான் ', ' அறவாழி அந்தணன் ', ' எண்குணத்தான் ' என அழைக்கும் தனி அழகைப் பாருங்கள் ! இவ்வித விரிந்த, பரந்த கொள்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட காரணங்கொண்டே சைவம் ஓர் காலத்து உலக சமயமாக ஒளிவீசியதாகும். அத்தோடு, அது நவீன விஞ்ஞான உலகின் புத்தம்புதிய கருத்துக்களோடு, முரண்படாமுறையில், முந்திய பொருள்கட்கெல்லாம் முந்தியதாயும், பிந்திய புதுமைக்கெல்லாம் பிந்தியதாயும் நிற்கும் பெருமையும் படைத்துள்ளது. நம் மொழியின் சிறப்பையும் நம் சமயத்தின் பெருமையையும் பேணி வளர்க்க விரும்பும் தமிழர்கள் இந்த உண்மையை ஒருகாலமும் மறக்கக்கூடாது.

சைவத்தின் சாரம் சமரசம் என்று கூறினால்கூட அது மிகையாகாது. எல்லாச் சமயங்கட்கும் தாயகமாயுள்ள நம் சைவம் எப்படிச் சமரசமின்றியிருக்க முடியும் ? திருமுறைகளில் அதனைப் பரக்கக்காணலாம். சமயாசாரியர்கட்குப் பின்வந்த பல ஞானிகளும் இந்த உண்மையை நன்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

" வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலு மேழைகாள்
மாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதேவ னலால் தெய்வ மற்றிலையே "

" விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்"

என்பவை போன்ற தமிழ் வேத வாக்குகளை உன்னுங்கள்.

சைவத்தின் சமரசத்தை உச்சநிலையில் வைத்துப் போற்றியவர் தாயுமான மகரிஷிகள். அவர் வேதாந்த - சித்தாந்த சமரசப் பாலங்கட்டியதுடன் நின்றுவிடவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் பரவியிருந்த எல்லாச் சமயங்களுக்கிடையேயும் அவர் சமரசங் கண்டு ' வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில் விளங்கும் பரம்பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை' யென்ற முடி

வுக்கு வந்தார். அக்காரணம்பற்றி சைவத்தை இராஜாங்கத்தில் அமர்ந்த சமயமென வியந்து கூறி, அதில் "சேர வாரும் செகத்தீரே" என்று அறைகூவி அழைத்துள்ளார். இப்படிப்பட்ட சமரசத்தை வற்புறுத்தியவர்கள் தெற்கே இராமலிங்கர், வடக்கே இராமகிருஷ்ணர். காலத்தையும் தூரத்தையும் வென்றுவிட்டு, கடவுளுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் ஏனைய சீவ ராசிகளுக்குமிடையேயுள்ள தொடர்பைக் கண்டுபிடிக்க விஞ்ஞானம் முயன்றுகொண்டிருக்கும் இக்காலத்தில், அருளற்ற அகச்சமய புறச்சமயப் பேச்சுகளில் காலங்கழிப்பதாற் பயனில்லை. உலகத்தில் இன்று நாம் காணும் முக்கிய சமயங்களெல்லாம் மெய்ப்பொருளாகிய இறையையே வழுத்துகின்றன; அன்பையே வற்புறுத்துகின்றன. எவன் தன சமயமே சரியென்றும் பிறசமயங்களெல்லாம் தப்பென்றும் பொய்யென்றும் கருதுகிருனே, அவன் 'சமயம்' என்ருல் என்ன என்பதையும் தன் சொந்தச் சமயம் உண்மையில் போதிப்பது எதுவென்பதையும் அறியாதவனுகின்ருன். இவ்வித அறிவிலிகளை திருமூலர் குரைக்கும் நாய்களுக்கு ஒப்பிட்டுள்ளார்.

> "ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள
> என்றது போல இருமுச் சமயமும்
> நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
> குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே"

என்பது அவர் வாக்கு. எனவே அன்பர்களே! "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவனென்று, எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" எனச் சைவ சமயநெறி கூறியிருப்பதே நமக்கும் பிறர்க்கும் நலன் தரும் நெறியாகும். நல்ல உலகு வேண்டி நிற்கும் அறுசமயம் வாய்மை, தூய்மை, அறம், அன்பு, தியாகம், தொண்டு இவையேயாம். இந்த ஆறையும் பேணி வாழ்ந்தால் கல்லாக் கலைகளை யெல்லாங்கற்று, சொல்லாப் பொருளை யுணர்ந்து நாம் எல்லாரும் எல்லா நலமும் பெறலாம். எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே எனப் பாடும் உயர்ந்த நிலையைத் தாயுமானவர் அடைந்ததுபோல நாமும் அடையலாம்.



## சைவ சமூகத்தின் புதிய இயக்கங்கள்

நமது சமுதாயத்தில், நமது சமயத்தினரிடம் இன்று தோன்றியுள்ள புதிய இயக்கங்களைப்பற்றியும், வேறு சில பிரச்னைகள் குறித்தும் என் கருத்துக்களை இத்தலைமை உரையில் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். அவற்றையும் அத்துடன் நமது குறைகளையும் எடுத்து இங்கு கூருவிட்டால் இந்த மகாநாடு தற்புகழ்ச்சியுடன் பழங்கதை பேசும் மகாநாடாகவல்லவோ முடியும்? தாய்நாடான இந்தியாவும், சேய்நாடான ஈழமும் அரசியல் சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் வாழ்வின் பலதுறைகளில் மறுமலர்ச்சி தோன்றியிருப்பதை நன்கறிவீர்கள். அழிந்துபோன பல புராதன ஆலயங்களைப் புனருத்தாரணம் பண்ணும் தொண்டில் பல பெரியார்கள் ஈடுபட்டுள்ளார்கள். இந்த ஆர்வம் திருக்கேதீச்சரத்திலிருந்து சோமநாதம் வரைக்கும் பரந்துள்ளது. ஆலயங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் கூட்டங்களிலும் கூட்டுப்பிரார்த்தனைகளும் வார வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இந்த இயகக்ம் ஆரம்பித்தது ஈழத்தில், நான் மிகவும் நெருங்கப் பழகியுள்ள சில மெய்யடியார்களின் நன்முயற்சியால் என்பதை மகிழ்ச்சயுடன் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தென்னுட்டில் சைவப்பெரியார் திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளை போன்றவர்களும் இதே தொண்டில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுக்கும் சைவ நன்மக்களின் நன்றி என்றென்றைக்கும் உரித்தாகுக.

வடமொழித் தென்மொழிப் பிரச்னை தென்னுட்டில் தோன்றியுள்ளதென அறிகிறேன். உலகிலுள்ள முக்கிய மொழிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்பு இருக்கவே செய்கிறது. ஒன்று சட்டத்திற்குரியதென்ருல் இன்னென்று வியாபாரத்திற்கும், வேருென்று பௌதிக சாஸ்திரத்திற்கும் உரியதாகவிருக்கலாம். அதேபோல் நம் தாய்மொழி பக்திக்குரியதென்ருல், சமஸ்கிருதம் கிரியைகளுக்கு வேண்டிய மந்திர சக்திபொருந்தியுள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னரும் இதேபோன்ற ஆலய மொழிப் பிரச்னை இருந்திருக்கலாம். அதை நீக்கி சமரசம் காண்பதற்கே, 'ஆரியன்

கண்டாய், தமிழன் கண்டாய்,' 'ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்' என்பவை போன்ற வாக்குகள் தமிழ் மறையில் இடம்பெற்றுள்ளன. தாய்மொழிப் பற்று பாராட்டத்தக்கதே! வேண்டற்பாலதே. ஆனால் அது பிறமொழித் துவேஷமாக மாறி வெறிகொள்வதால் அனர்த்தமே விளையும். ஆகையால், இந்த ஆலயமொழிப் பிரச்னை ஆரியமும் தமிழும் நன்கறிந்த, பக்தியுள்ளம் படைத்த பெருமக்கள் கலந்து ஆலோசித்துத் தீர்க்கவேண்டிய தொன்றாகும். எனவே, ஈரோட்டில் குன்றக்குடி சுவாமிகள் தலைமையின்கீழ் நடந்த 47-வது ஆண்டு விழாவில் வழக்கம்போல் தொடக்கத்தில் வரும் கோவில் வழிபாட்டில் ஒரு வேறுபாடு காணப்பட்டது. அதாவது ஈரோடை அப்பர் திருமுன்னிலையில் கோவில் குருக்கள்மார் செந்தமிழால் அர்ச்சனை வழிபாடு செய்தார்கள் என்பது. இதனையொட்டியே செயலாளர் கூட்டத்திலும் எல்லாத் தமிழ் நாட்டுக் கோவில்களிலும் தமிழிலேயே இறைவழிபாடு நடக்கவேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிகிறேன். இதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகள் சமாஜம் மேற்கொண்டிருக்குமென நம்புகிறேன். இவ்வகையான மாறுதல்கள் காலத்திற்கேற்றபடி ஆலயங்களில் முன்னும் நடந்தது சரித்திரங் கண்ட உண்மை. இந்த இயக்கத்தால் சமய பக்தியுயர்வதற்குத் தடையில்லை. அது பரவும் முறையை ஈழநாடு எதிர்பார்க்கும்.

இந்த நன்முயற்சிகளிடையே, நாத்தழும்பேற நாத்திகம் பேசுவோர் கூட்டமும் பெருகிவந்துள்ளது. கோவில்களை இடியுங்கள், விக்கிரகங்களை உடையுங்கள் புராண இதிகாசங்களை எரியுங்கள் என்பவைபோன்ற துர்ப்பிரசாரம் இந்தியாவில் வழங்கும் மொழிகளில் தமிழில் மாத்திரம் நடக்கிறதென்பதை துக்கத்துடனும் வெட்கத்துடனும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது சில வாரங்களுக்குமுன் மதுரையில் இராமாயணப் போட்டியால் நடைபெற்ற கலகத்தையும் போலீஸார் தாக்கலையும் கேள்வியுற்ற எந்நாட்டிலுமுள்ள தமிழனின் தலை நாணமுற்று கவிழ்ந்து நிற்கவேண்டியிருந்தது. இவை எல்லாவற்றிற்குங் காரணம் சைவ சமயத்தை நாம் சீரிய முறையில் பின்பற்றாததே. சமய சேவை வேறு, சமூக சேவை வேறு, என்ற கொள்கை



சைவத்தில் எப்போது புகுந்ததோ அப்போதே புரட்சிக்கு வித்து விதைக்கப்பட்டது, நாம் எங்கள் சமய நெறிகளின்படி செவ்வனே ஒழுகாதிருந்தால் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டிருக்கும் இந்தக் காலத்தில் தங்கள் உரிமை மறுக்கப்பட்ட மக்கள் புரட்சி செய்வதை யார்தான் தடுக்க முடியும்?

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே."

எனப் பாடியது எங்கள் அப்பர் அடிகள் என்பதைத் தமிழ் இனம் முற்றும் மறந்துவிட்டது.

"நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன?

என்றும்,

"மாமறைநூல் ஏற்றிக் கிடக்கும் எழுகோடி
மந்திரம் என்ன கண்டாய்?"

என்றும்,

"கல்லிலுஞ் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே?"

என்றும் கேள்விகளை எழுப்பியவர் எங்கள் பட்டினத்தார் தானே. இவைகளைத்தானே சிற்றறிவினரும், பாமரரும், நாத்திகரும் சைவப் பெரியாரைக் கேட்டனர். கேட்போரிலா குற்றம்? அல்லது கேள்விக்குத் தகுந்த மறுமொழிகளைத் தமது செய்கையில் காட்ட இயலாமல் திகைத்து நிற்கும் சைவ சமயத்தவரிலா குற்றம்?

சாதனையற்ற சாத்திரப்படிப்பு நம்மிடையே சாரமற்ற சைவர்களையே சிருஷ்டித்துள்ளது. சாதனையற்ற சாத்திரப்படிப்பு, சாரீரமற்ற சங்கீதத்தைப் போன்றது. படிப்பவர்களுக்கும் அதனால் பிரயோசனமில்லை; கேட்போருக்கும் ஒரு நன்மையுமில்லை.

கலியுகத்தில் பக்திநெறியே சிறந்தது; அந்த நெறியில் இறைநாம ஜெபமே எளிய இனிய சாதனையென்று பிரசங்கம் செய்தோரையோ அச்சாதனையை நடைமுறையில்

கையாண்டு பிறர்க்கும் வழிகாட்டியவர்களையோ வேண்டிய அளவுக்குக் கண்டதில்லை.

"கற்றுணைப் பூட்டியோர் கடலுட் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே"

என்பவை போன்ற தமிழ்மறைச் சொற்றொடர்கள் சில பிரசங்க மேடைகளில் அலைவீசியிருக்கலாம். ஆனால், பிரசங்கம் செய்தவர்கள் உள்ளத்திலும் அப்பிரசங்கங்களைக் கேட்டவர்கள் உள்ளத்திலும் திருநாம உச்சரிப்பு இருந்ததில்லை. வடநாட்டில் பற்பல பாகங்களில் அகண்ட நாம சங்கீர்த்தனத்தைக் கேட்கலாம். தென்னாட்டிலோ, ஈழத்திலோவெனில் அது ஓர் விபரீதமான முறையாகக் கருதப்படுகின்றது. பண்டிதர்கள் சிலர் அதை நையாண்டி பண்ணுகின்றனர். இந்த நிலையில், கல்லாத பேர்களே நல்லவர்கள் என்று சாதாரண மக்கள் கருதத்தொடங்கியதில் வியப்பென்ன உண்டு?

இந்துமத தத்துவ சாத்திரங்கள் என்னும் முக்கிய விஷயம்பற்றி பேரறிஞர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களால் இரண்டு பாகங்களில் மொத்தம் 1500 பக்கங்கள் கொண்ட ஒரு நூல் இற்றைக்குச் சரியாக இருபத்தெட்டு வருஷங்களுக்குமுன் வரையப்பட்டு இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அச்சிடப்பெற்றது. இந்த நூல் இதுவரையில் ஆறுமுறை அச்சேறியதிலிருந்து அதின் பிரசித்தியை நாம் உணர்ந்து கொள்ளலாம். அந்நூலில் நமது சைவ சித்தாந்தம் 12 பக்கங்களுக்கு மாத்திரம் உரிமைபெற்று உலகில் எவராலும் தேடுவாரற்ற அனாதைப் பிள்ளைபோல் காட்சியளிக்கின்றது என்பதை நான் துக்கத்துடன் குறிக்க விரும்புகின்றேன். அதுவுமோவெனில், ராமானுஜரின் விசித்தாத்துவிதத்தை விளக்கும் 62 பக்கங்கள் கொண்ட அத்தியாயத்துக்குப்பின், நூலின் முடிவுரைக்குமுன் பேசப்பட்டுள்ளது. குறித்த நூலின் ஆசிரியர்மீது ஏதாவது ஒரு குற்றம் சுமத்தும் நோக்கத்துடன் இதை நான் எடுத்துக் கூறவில்லை. ஓர் காலத்து உலக சமயமாயிருந்த சிவனெறியின் சிறப்பு எப்படி அருகி வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டவே அந்த நூலை அத்தாட்சியாக எடுத்தேன். இந்த நிலைக்குக் காரண புருஷர்கள் சைவ சமயிகளேயாவர்



முக்கியமாக, வேதாந்த—சித்தாந்த வாதத்தைக் கிளப்புவதையே சாதனையாகக் கொண்டிருந்த புத்தகப் புலவர்களேயாவர். அத்தோடு, சைவ அறநிலையங்களும் அவற்றில் தலைவர்களும் அவ்வக் காலங்களுக்கு வேண்டிய தொண்டைச் செயயத் தவறிவிட்டார்கள் என்பேன். சைவ மடங்களுள் ஒன்றாவது சென்ற நூற்றாண்டில் இதன் பொறுப்பை உணர்ந்து கடமையாற்றியிருப்பின், 1893-ம் ஆண்டில் சிக்காகோவில் நடந்த சர்வமத மகாநாட்டில் சித்தாந்த முழக்கம் இருந்திராதா? தமிழுக்கும் சைவத்திற்குமே தமது உடல், பொருள் ஆவி மூன்றினையும் அர்ப்பணம்செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆரம்பித்த சைவப் பணிக்குத்தானும் அவர் காலத்தில் போதிய ஆதரவு கிடைத்ததா? இல்லவே இல்லை. ஆயினும் நம் முன்னோர் செய்த புண்ணியத்தின் பயனாற்போலும், காசியிலிருந்து சிவநெறி பரப்பிய குமரகுருபர சுவாமிகளின் குரு பரம்பரையில் வந்த திருப்பனந்தாள் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித்தம்பிரான் அவர்களின் நன்முயற்சியால காசி சர்வகலாசாலையில் இன்று சைவ சித்தாந்தமும் தனக்குரிய மதிப்பிடத்தைப் பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். இம்மடாதிபதியின் சிவத்தொண்டு நீடூழிவாழ்க!

உலகப் பிரசித்திபெற்ற சுவாமி சிவானந்தர் பழுத்த சைவக் குடும்பத்தில் தோன்றிய சுத்தத் தமிழர். பஞ்சாட்சர உபதேசம் பெற்றவர். சிவபூசையை சிவபூசையாகக் கொண்ட சிவபக்தரும், சிவயோகியுமாவர். இன்று பக்தி ஞான கர்மயோக சாதனைகள் செய்வோர்க்கெல்லாம் உறுதுணையாக விளங்குகின்றார். அவர் சிவநாம செபத்தை ஓத வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார். சென்ற 3 வாரங்களாக இலங்கையில் ஓர் மகாத்மா சுற்றுப்பிரயாணம் செய்கிறார். இறைநாம ஜெபசாதனையால் தெய்வ நிலையடைந்த சுவாமி ராமதாசர் அவர். நான்கு மாசங்களாக உலகின் நாலுபக்கங்களிலும் அந்நற் சாதனையின் சிறப்பைப் பிரசாரம் செய்துவிட்டுத் தாய்நாடு திரும்பும் வழியில் இப்போது ஈழத்தில் தங்கி அதே தொண்டில் ஈடுபட்டுள்ளார்.

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே

சென்மமும் மரணமு மின்றித் தீருமே
இன்மையே யிராமவென் றெழுத் திரண்டினால் "

என்ற கவிச்சக்கரவர்த்தியாம் கம்பன் பாடலில் அடங்கியுள்ள ராமநாம உண்மையை, அவர் எடுத்துவிளக்கும் திறன் அற்புதமானதாகும். காந்தியடிகள் தமது இறுதிக் காலத்தில் வடநாட்டில் செய்த இராம நாம பஜனையையே அவர் உலகெங்கும் எடுத்துச் சென்றார். அதனால் லட்சக் கணக்கான மக்கள் ஆத்ம சாந்தியடைந்துள்ளார்கள்; இன்னும் அடைகின்றனர். அவ்விதமான இயக்கம் இங்கும் எங்கள் நாட்டிலும் பரவுதல்வேண்டும். அத்தோடு தியானமும் சேர்தல்வேண்டும். சென்ற சில ஆண்டுகளாக யான் பெற்றுள்ள சொந்த அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டே இதனைநான் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்பினேன்.

அண்மையில் கலைபற்றியும் கலாசாரம் பற்றியும் ராஜாஜி ஆரியதொரு விளக்கம் கொடுத்தார். அதைப் படித்தபோது, உலக மேதாவியான அல்பேட் ஐன்ஸ்ரையின் (Albert Einstein) பல வருஷங்களுக்குமுன் கூறிய ஓர் வசனம் நினைவுக்கு வருகிறது. "Culture is what is left in man after be has forgatten all he has learnt" என்பதே அந்த வசனம். அதாவது, ஒரு மனிதன் தான் படித்ததையெல்லாம் மறந்தபின் அவனிடம் எஞ்சி நிற்பதே கலாச்சாரம் எனப்படும் என்பதாம். பண்பாடு என்பதும் அதுவே. இந்த உண்மையை 2000 வருஷங்களுக்கு முன்னரேயே தமிழினத்தாருக்கு வள்ளுவர் பெருமான் உபதேசித்துள்ளார். திருக்குறளின் கடவுள் வாழ்த்திலேயே இரண்டாவது குறளாய்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழா ரெனின்."

என்ற கேள்வியைப் போட்டிருக்கும் மாட்சியையும், அதற்குத் தாமே விடைபகரும் முறையில், கல்வியதிகாரத்தில் முதற்குறளாய்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"



என வற்புறுத்தியுள்ள சிறப்பையும் உற்றுநோக்குக! நாம் கற்பவையெல்லாம் இருதயத்திற்குச் சென்று இரத்தத்துடன் கலவாது கழுத்துக்குமேலேயே நின்றுவிட்டால், கற்றதனால் பெற்ற பலாபலன் வெறும் தலைவீக்கமேயாம். இதனையே வள்ளுவர் புல்லறிவென விளக்கியுள்ளார் பிறிதோர் இடத்தில். தமிழைவிட வேறு எந்த மொழியிலும் காணமுடியாத அரிய விளக்கம் இது.

"வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு"

என்கிறார் அப் பொய்யாமொழிப் புலவர்.

இருபதாம் நூற்றாண்டில் நுண்ணறிவின்மை பெற்றுள்ள செல்வாக்கே உலகில் நாம் இன்றுகாணும் பலவித அல்லல்களுக்கெல்லாம் முக்கிய காரணமாகும். இந்த நாட்டில் தானும், கல்வியிலாதவர்களிலும் பார்க்க,படித்தவர்களெனத் தம்மை பாராட்டிக்கொள்ளும் வெறும் பட்டதாரிகளே, பண்டிதர்களே, அறிஞர்களாகி நாஸ்திகக் கொள்கைகளையும் நாசவேலைகளையும் தூண்டி அமைதியைக் குலைக்கின்றனர். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் சமயத்துறையில் தொண்டு செய்ய முன்வந்துள்ள சகோதர சகோதரிகட்கும், முக்கியமாக சைவசமாஜ அங்கத்தவர்கட்கும் செயலாளர்களுக்கும், யான் சமர்ப்பிக்க விரும்பும் விண்ணப்பம் ஒன்றுண்டு. 46-வது மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய எனது மதிப்பிற்குரிய திரு. ஓமந்தூர் - ராமசாமி ரெட்டியார் அவர்கள் தமது தலைமை உரையின் முடிவில் குறித்த சில முக்கியமான விஷயங்களையேயானும் மீண்டும் எடுத்துக் கூறவிரும்புகிறேன். நாட்டில் அன்பும் அமைதியும் நிலவ வேண்டுமாயின் ஒவ்வொரு வீட்டிலும் அவை முதலில் உதயமாகவேண்டும். பல வீடுகள் சேர்ந்தே ஒரு நாடு அமைகிறது. ஆகையால் வீடு எப்படியோ அப்படியே தான் நாடும் இருக்கும். வீட்டில் தந்தையும் தாயும் குழந்தைகளும்சேர்ந்து காலையும் மாலையும் சிறிதளவு நேரத்தையாவது இறைவழிபாட்டில் கழிக்கவேண்டும். இந்த வழக்கத்தை அங்கத்தவர்கள் சகலரும் தமது முதல் கடமையாகக் கொண்டு, நடைமுறை[illegible] நண்பர்களையும் உறவினர்களையும் அதில் ஈடு[illegible]. அப்போதுதான்,

" நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனும் "

எம்முடன் பிரத்தியட்சமாக உறைந்திருப்பன்; எங்கும் இல்லாததோர் இன்பம் நம்பாலதாகும். பரம்பொருளும் நமக்குச் சேவகனாவதுபோல் நாமும் சமூகத்திற்குச் சேவகராகுவோமாக.

அன்பர்களே: சாதுரியமான பேச்சுக்களைக் கேட்டு மக்கள் மனந்திரும்பிய காலம் மலையேறிவிட்டது. புத்தியும் குயுக்தியும் செறிந்த இக்காலத்தில், சாதாரண மக்கள் எப்படி வாழ்கின்றோம்? நமது வாய்ப்பேச்சுக்கும் நமது வாழ்க்கைக்கும் இடையே ஏதாவது தொடர்புண்டா? என்று ஆராய்கிறார்களேயன்றிக் கெட்டித்தனமாக தத்துவ விளக்கங்களுக்குச் செவிசாய்ப்பது இடையாது. அப்படி அருமையாக இன்று இவ்விடத்தில் காண்பதுபோல, செவி சாய்த்தாலுங்கூட ஒரு காதால் கேட்டு மற்றக் காதூடாக வெளியாக்கிவிடுகிறார்கள். ஆகையால், நம்மிடையே அறநெறி வாழ்வும் ஆன்ம நேயமும் மிளிரவேண்டும். அவற்றின் பயனாகத் தியாகமும் சேவையும், பயன்கருதா, புகழ் தேடாப் பணியும், நாடெங்கும் பரவவேண்டும். நம்மவர் சகலரும் சன்மார்க்க சீலராக வாழ நாம் பலவகையாலும் நம்மால் இயன்றவரை உதவிசெய்தல் வேண்டும். அதனைச் செய்து நிறைவேற்றக் கூடிய அன்பையும், அறிவையும் ஆற்றலையும் எல்லாம்வல்ல இறைவன் நமக்கு அளிப்பானாக!

அழைப்புக்குமேல் அழைப்பு விடுத்து என்னைக் கௌரவித்த சைவசித்தாந்த மகாசமாஜத்தினர்க்கு என் மனமார்ந்த நன்றியை மறுபடியும் தெரிவிக்கின்றேன். எனது பேச்சைப் பொறுமையுடனும் அமைதியுடனும் கேட்ட உங்கள் எல்லோருக்கும் எனது நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க!!

## சமாஜ அறிக்கைகள்

நமது சமாஜ நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று 13-2-55க்குப் பதிலாக 6-3-55ல் நடைபெறும். இவ்வாண்டு சமாஜத் தேர்வுகளின் பாடதிட்டம், பொன் விழா மலர் வெளியீடு முதலிய விஷயங்கள் ஆலோசிக்கப்படும்.—ச. சிவகுமாரன், காரியதரிசி.

நமது சமாஜத்தின் மாதக்கூட்டம் ஒன்று குன்றத்தூருக்கருகிலுள்ள கோவூரில் 1955ஆம் பிப்ரவரிமீ 27உ ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். நிகழ்ச்சி நிரல்: காலை 10—11 ஆலய வழிபாடு, பகல் 12 உணவு, பிற்பகல் 2—4 சங்கீத அரங்கு, 4—6 பொதுக்கூட்டம். திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம்பிள்ளை, ம. பா., ச. சிவகுமாரன் முதலியவர்கள் சொற்பொழிவுகள். அனைவரும் திரண்டு வருக.

---


ஸ்ரீ

# ஆண்டாள் திருப்பாவை

மூவாயிரப்படி, ஆறாயிரப்படி, சுத்தஸத்வம் தொட்டாசார்யர் ஸ்வாபதேசம், வாநமாமலை ஜீயர் ஸ்வபாதேசம், பல ஆராய்ச்சிக் குறிப்புக்களடங்கிய 616 பக்கம். நல்ல வெள்ளைக் காகிதத்திலச்சிடப் பெற்று, முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது.

**மயிலை மாதவதாஸன் பதிப்பு**

பிரதி ஒன்றின் விலை ரூபா இரண்டரை; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று.

# நாலாயிரதிவ்யப்ரபந்தம்

**மயிலை மாதவதாஸன் பதிப்பு.** விலை ரூபா மூன்று; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0. வி. பி., ரயில்வே பார்சல் மூலம் அனுப்புவதில்லை.

கிடைக்குமிடம்:—

**ம. பாலசுப்பிரமணிய முதலியார்**, பி.ஏ.,பி.எல்.,
திருவருளகம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை-1.

# தேவாரம் அடங்கன்முறை

## மயிலைகிழார் இளமுருகனார் பதிப்பு

ஏழு திருமுறைகள், 8250 பாடல்கள், 1488 பக்கம்; இதில் 160 பக்கங்களில் 150 தலைப்புக்களில், பல உட்பிரிவுகளில், பற்பல ஆராய்ச்சி நுட்பக் குறிப்புக்கள் உள்ளன. 274 பாடல் பெற்ற சிவஸ்தலங்களுக்குச் செல்லும் வழிவிவரம், திருவிழாச் சிறப்பு, கல்வெட்டுக் குறிப்பு; ஒவ்வொரு தலத்திற்கும் உள்ள பாடல்களின் குறிப்பு முதலியன எல்லாம் அடங்கிய அருமையான பதிப்பு.

ஒரே வால்யூமாக முழு கலிக்கோ பைண்டு விலை ரூ. 7—0—0; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—9—0.

இரண்டு வால்யூமாக முழு கலிக்கோ பைண்டு விலை ரூ. 8—0—0; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—10—0.

வி. பி. மூலமாகவும், ரயில்வே பார்சல் மூலமாகவும் அனுப்புவதில்லை.

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும்பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர் பைண்டு விலை அணா பன்னிரண்டு.

பாம்பன்-குமரகுருதாச சுவாமிகள் அருளிய

**செவியறிவுறூஉ** விலை அணா [illegible]

கிடைக்குமிடம் :—

**ம. பாலசுப்பிரமணிய முதலியார்**, பி.ஏ.,பி.எல்.,
திருவருளகம், 150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை–1.


Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by M. Balasubramanya Mudaliar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14